மிஸஸ். ஜெயராமன்

ராம. ராமநாதன்

PRESENTED BY:
V. PR. ... M.
KASIVISW...
PA...

உ சிவமயம்.
ராம. அ. அ. சு. மெ.
பாகனேரி
5. 5. '38

சங்க வெளியீடு 3

மிஸஸ். ஜெயராமன்

(ஒரு தனவணிக சமூகக் கதை)

கோட்டையூர்,
ராம. ராமநாதன்
எழுதியது

வைசிய இளைஞர் தமிழ் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

1936

அய்மென்
ஷண்முகானந்த சங்கத்தாரால்
வெளியிடப் பெற்றது

திருவள்ளுவர் நூல் நிலையம்

காபி ரைட்]

[விலை அணா 5

உரிமை ஆசிரியருடையது.

ஸமர்ப்பணம்

வருங்காலத்தில் ஒரு பெரிய புரட்சியை உண்டு பண்ணிச் சமூகத்தை மிகவும் முற்போக்கடையச் செய்யப் போகின்ற வாலிப வீரர்களுக்கு இச் சிறு நவீனத்தை மிக்க ஆர்வமுடன் ஸமர்ப்பிக்கின்றேன்.

ஆசிரியன்

வெளியிட்டோர் முகவுரை

தோழர் ராம. ராமநாதன் அவர்களைத் தனவணிக உலகம் நன்கறிந்திருக்கும். அவர்கள் ஓர் நல்ல எழுத்தாளர். பத்திரிகைகளில் வெளிவரும் அவர்களுடைய சிறு கதைகள், நிறைந்த உணர்ச்சியும், சிறந்த கற்பனையும் உடையவை.

நமது சங்கத்திற்குத் தோழர் ராம. ராமநாதன் அவர்கள் இயற்றியிருக்கும் பெருந் தொண்டு என்றும் மறக்க முடியாத தாகும். சுருக்கமாகக் கூறினல், நமது சங்கம் தோன்றியதற்கு மூல காரணமே தோழர் ராம. ராமநாதன் அவர்கள் தான்.

இப்பொழுது, அவர்கள் எழுதிய இச்சிறு நவீனத்தை நமது சங்க வெளியீடாகப் பிரசுரிக்கும்படியான பாக்கியம் கிடைத்தமை குறித்து மிகவும் சந்தோஷமடைகின்றேம். சமூக முன்னேற்றத்திற்கான உணர்ச்சிகளை இதில் ஆசிரியர் அழகாகச் சித்தரித்திருக்கிறர்.

இதிற் கிடைக்கும் சொற்ப லாபமும் சங்க வளர்ச்சியையே சார்வதால், தனவணிக சமூகம் இப் புத்தகத்தை ஆதரித்து, ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகின்றேம்.

தோழர் ராமநாதன் அவர்களின் பேறு முனையினின்றும், சீர்திருத்தத்திற்கான இன்னும் பல அழகிய கதைகள் தோன்ற அருள்புரியுமாறு எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.

இச் சிறு நவீனத்திற்குச் சிறப்புரைகள் வழங்கிய ஸ்ரீ வே. சாமிநாத சர்மா அவர்களுக்கும் ஸ்ரீ ஆ. பழ. சொக்கலிங்கன் அவர்களுக்கும் புத்தகத்தை அச்சியற்றி வெளிக்கொணர்வதில் மிகுந்த கவனம் எடுத்துக்கொண்ட ஸ்ரீ எஸ். நாராயணன் அவர்களுக்கும் நமது மனப்பூர்வமான நன்றி உரியதாகுக.

இங்ஙனம்,

ராம. அருணசலன்,

காரியதரிசி,

ஷண்முகானந்த சங்கம்.

அய்மென்,
29—11—36

ஆசிரியன் முன்னுரை

இச் சிறு கதை, ஒரு வாரப் பத்திரிகையில் வெளியிடுவதற்காக எழுதப் பெற்றது. சில நண்பர்களின் வேண்டுதலின் பேரில், இன்று புத்தக வடிவமாக வெளி வருகின்றது.

சிறியேன் ஒரு சிறந்த எழுத்தாளனல்ல. எனவே, எழுத்தலங்காரமும், கற்பனைச் சித்திரமும், கதா ஸௌந்தர்யமும் இதில் லவலேசமும் காண முடியாது.

சமூக விடுதலைக்குச் சிறிதளவாவது தொண்டாற்ற வேண்டும் என்ற உணர்ச்சியின் உத்வேகத்திலே இக் கதை தோன்றிற்று. இதனைத் தன வணிக சமூகம் வரவேற்குமென்று நம்புகின்றேன்.

இதைப் புத்தகரூபத்தில் வெளிக் கொணர்ந்த அய்மேன் ஷண்முகானந்த சங்கத்தாருக்கு எனது மனப்பூர்வமான நன்றி உரியதாகுக.

ராம. ராமநாதன்

உயர்திரு

வெ. சாமிநாதசர்மா அவர்களின் சிறப்புரை.

எனது நண்பர் ஸ்ரீ ராம. ராமநாதன் அவர்கள் எழுதிய **'மிஸஸ் ஜெயராமன்'** என்ற சிறிய சீர்திருத்தக் கதையைப் படித்துப் பார்த்தேன். சிறு கதைகள் எழுதுவதில் இவருக்குள்ள ஆற்றலை நான் பெரிதும் வியந்து பாராட்டுகிறேன். இவருடைய உள்ளத்திலே சீர்திருத்த உணர்ச்சி பொங்கி எழுகிறது. அதன் வேகமே இத்தகைய நவீனங்களாக உருவு கொண்டு நமக்குக் காட்சியளிக்கின்றன. இதுபோல் இவர் இன்னும் பல துறைப்பட்ட நூல்களையும் எழுதித் தமிழ்த் தாய்க்கும் பாரத தேவிக்கும் சூட்ட எல்லாம் வல்ல இறைவன் அருள்வாராக.

இரங்கூன்
24—11—36

வெ. சாமிநாதன்.

உயர்திரு

ஆ. பழ. சொக்கலிங்கன் அவர்களின்

சிறப்புப் பாயிரம்.

(நேரிசை யாசிரியப்பா)

ஜெயம் பெறு முலகில் ஜெயமுறு வாழ்க்கை
மகிழ்வும், அறமும், மனத்திற் கின்பமும்
என்னுங் கொள்கை யுன்னிய பெண்டிர்,
இயற்றிய சூழ்வும்; பயிற்றிய பண்பும்;
சமூக விதவையின் சாற்றரு துயரமும்;
சாரும் விதவை நேரும் மணமும்;
மணவிழா நாளின் மனையின் நீங்கி,
மனங்கொண் டோனை மணக்குந் திறமும்;
ஒழுக்கமும், உயர்வும், வழுக்கும், தீங்கும்,
இவையிவை யென்றே இயம்புறு **மி(ஸ்)ஸஸ்**
ஜெயராமன் எனுஞ் சீரிய விந்நூல்
எழுதியோன் பெற்றி யீண்டுக் கூறுதும்:—
எத்தத மொழியினும் இனிமை பெற்ற
அத்தத தமிழின் முத்தமிழ்ச் சங்கம்
தோன்றிய பெருமை யூன்றும் பாண்டி

நாட்டிற் கோட்டை யூர்நகர் தன்னில்
நாட்டுக் கோட்டை யாரெனு நாமந்
தாங்கும் பெருமைத் தனவணி கர்சமு
கத்தி லுதித்த கண்ணியன் (இ)ராம
நாதச் செட்டியார் நயந்தரு புதல்வன்;
இன்சொற் கூறும் இயல்புடை யாளன்;
சீரிய நண்பர் சிந்தையில் மிளிர்வோன்;
செந்தமி ழறிவுத் திறத்தில் மிக்கோன்;
ஆங்கில மொழியும் பாங்குறக் கற்றோன்;
ஒழுக்கமே யுயிரினும் மேலா யுன்னுவோன்;
தேசத் தொண்டன்; திறமை சாலி;
"ராம ராம்" என்னும் புனைபெய ரானும்,
இயற்பெய ரானும், இதயங் கவருஞ்
சிறுகதை பற்பல எழுதுஞ் செம்மல்;
என்னுடைத் தோழன்; நன்னய மார்வோன்;
"இராம· இராம நாதன்" என்போன்·
சமூகத் தொண்டின் கடமை தனதெனக்
கண்ட விந்நாலும் கொண்டவா சிரியனும்
சாரும் ஐமேன் ஷண்முகா னந்த
சங்கமும் இந்தத் தாரணி
மங்கலமாக வாழ்கபல் லாண்டே.

இரங்கூன், 24—11—36

மிஸஸ். ஜெயராமன்

மந்த மாருதம் ஜிலு ஜிலு வென்று வீசிக் கொண்டிருந்தது. வானத்திலே சந்திரன் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதன் குளிர்ந்த காந்தம் பால்போல் எங்கும் பரவி யிருந்தது. வீட்டு வாசலிலே ஓர் சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டு டாரதி-யார் பாடல்களை ஆர்வத்தோடு புரட்டிக் கொண்டிருந்தேன். எடுத்ததும் காதலின் புகழ் தோன்றிற்று :

"காதலினால் மானுடர்க்குக் கலவியுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்;
காதலினால் மானுடர்க்குக் கவிதையுண்டாம்;
கானமுண்டாஞ் சிற்பமுதற் கலைகளுண்டாம்;
ஆதலினாற் காதல் செய்வீர் உலகத்தீரே !
அஃதன்றோ இவ்வுலகத் தலைமையின்பம்
காதலினாற் சாகாம லிருத்தல் கூடும்;
கவலைபோம், அதனாலே மரணம் பொய்யாம்."

என்ற வரிகளைத் திரும்பத் திரும்பப் படித்தேன். சாகாமலிருக்கும் நெறியைப் புலவர் பெருமான் அழகாகக் காட்டிச் சென்றார். ஆனால் நடைமுறையில் எத்தனை பேர் காதல் செய்கின்றார். என்று எண்ணிய

பொழுதில் என் நெஞ்சம் ஏங்கிற்று. நெட்டுயிர்ப்போடு மறு பக்கம் நோக்கினேன் :

"நாடகத்திற் காவியத்திற் காத லென்றால்
நாட்டினர்தாம்வியட்பெய்தி நன்றுமென்பர்;
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்,
பாடைகட்டி யதைக் கொல்ல வழி செய்கின்றார்.
பாரினிலே காதலெனும் பயிரைமாய்க்க
மூடரெலாம் பொறுமையினால் விதிகள் செய்து
முறைதவறி யிடரெய்திக் கெடுகின்றாரே."

என்ற வரிகள் தென்பட்டன. உடனே சடக்கென ஓர் ஞாபகந்தோன்றி என்னை ஸ்வீகரித்துக் கொண்டது. அது ஒரு காதற் கூத்து. சமீபத்தில் நடந்த சம்பவம். கதா ரீதியில் சாங்கோ பாங்கமாகக் கூறுகின்றேன் :-

1

செட்டிமார் நாட்டில் புதிதாக உண்டான ஊர்களில் மாங்குடி ஒன்று. ஒரே கோவிற் பங்காளிகளான சிலர் அங்குக் குடியேறினார்கள். அவர்களே அந்த ஊரை உண்டாக்கியவர்கள். நல்ல வசதிகளுடன் அந்தச் சிற்றூர் நிர்மாணிக்கப்பெற்றிருந்தது.

கந்தசாமி செட்டியார் அந்த ஊரிலே பிரபலஸ்தர். வாய்த்துடுக்காய்ப் பேசுவதிலே, விவகாரங்களைத்

திறமையாய் முடிப்பதிலே, எதிரிகளைச் சுலபமாய்வசீக ரித்துக் கொள்வதிலே அவர் அசகாயசூரர். வானத்தை வில்லாய் வளைக்கவும், மணலைக் கயிருய்த் திரிக்கவும் அவரால் முடியுமென்று ஊருக்குள்ளே எல்லோரும் பேசிக் கொள்வார்கள்.

தேடித் தவங்கிடந்து அவர் பெற்ற குழந்தைப் பேறு சீராரும் பங்கயச் செல்வி கோகிலம் ஒருத்தி தான் !

குழவிப் பருவத்திலே அவள் தூரு தூரு வென்று சிறு நடை நடந்து, கொஞ்சிப் பேசிய மழலை மொழி களைக் கந்தசாமி செட்டியார் இப்பொழுது எண்ணினு லும் அப்படியே பூரித்துப் போய் விடுவார்.

கந்தசாமி செட்டியாருக்குத் தங்கை மகன் ஒருவ னுண்டு: ஜெயராமன் என்று பெயர். கோகிலத்துக்கு இரண்டு வருடம் மூத்தவன். முகவசீகரமும் சுறு சுறுப் பும் கொண்ட சிவந்த மேனி. நல்ல துடுக்கான பயல் என்று கந்தசாமி செட்டியாருக்கு அவன் பேரிலே நிரம்பப் பிரியம். ஆகவே அவன் மாங்குடியிலே வளர் ந்து வந்தான். மேலும், ஆயாள் வீடல்லவா !

ஜெயராமனும் கோகிலமும் இணைபிரியாத் தோழர் கள். பள்ளிக்கூடத்துக்குப் போனுலும், விளையாடச் சென்ருலும், வீட்டிலே யிருந்தாலும், கோவிலுக்குப் போனுலும் சாப்பிடச் சென்ருலும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதே கிடையாது. ஒன்ருய்த்தான் உண்பது,

ஒன்ருய்த்தான் உறங்குவது. ஒன்ருய்த்தான் திரிவது. ஆடல் பாடல் எல்லாம் ஒன்ருகவேதான். தாயம் போடுவதிலும் பல்லாங்குழி ஆடுவதிலும் இரண்டு பேருக்கும் ரொம்ப குஷி. கோகிலம் இவற்றில் பலே ஆட்டக்காரி!

இவையெல்லாம் எப்பொழுது? அவர்களுடைய சிறுபிராயத்திலே. பதின் மூன்ருவது வயதில் கோகிலம் பருவம்எய்திஞள். அதற்கு முன்பு நடந்த கதை அவை யெல்லாம். அதுவரையில் தான் ஜெயராமனும் அங்கு வசித்து வந்தான். அவனுடைய படிப்புங் கூட அவ்வூரில் அத்துடன் பூர்த்தியாயிற்று என்று கூறலாம்.

2

கோகிலத்தை ஜெயராமனுக்குத் தான் கட்டிக் கொடுக்கப் போகிருர்கள் என்று ஊருக்குள்ளே பேசிக் கொண்டார்கள். கந்தசாமி செட்டியாரே அவனுக்குத் தான் கட்டிக் கொடுப்பதாகக் கூறிஞர். கோகிலத்துக்கு உள்ளுக்குள்ளே அடங்காத சந்தோஷம். ஜெயராமன் பெயரைக் கேட்ட பொழுதெல்லாம் குபீரென்று அவள் முகம் நாணத்தால் சிவக்கும்.

கந்தசாமி செட்டியார் ஜெயராமனைத் தமது பிபார்சின் பேரில் மலாய் நாட்டில் ஒரு பெருங் கடைக்குக் கூட்டியனுப்பி யிருந்தார்.

*　　　　*　　　　*

உலகிலே நாம் நினைக்கிறபடி எந்தக் காரியமும் நடைபெறுகிறதா? இல்லை; ஏனில்லை? மனிதன் தன்

னிச்சைப்படி எதையும் செய்து கொள்ள முடியாதா? பேஷாய் முடியும். உண்மையான சமதர்மத்தின் லட்சணம் எப்பொழுது உலக மெங்கும் வியாபிக்கின்றதோ, அப்பொழுது மனிதன் தன் ஆசைப்படி எதையும் பூர்த்தி செய்து கொள்ள முடியும். இப்பரந்த உலகில் எல்லா மனிதர்களின் எல்லா விருப்பங்களையும் சுலபமாய் நிறைவேற்றிக்கொள்ளக்கூடும் என்பதே சமதர்மத்தின் அடிப்படையான தத்துவம். இயற்கைத் தேவி அதற்கு என்றும் உதவி செய்கின்றாள். மனிதர்களுக்கு மத்தியிலேயே நுழைந்த ஜாதி ஆணவம், உயர்வு, தாழ்வு, ஏழை, பணக்காரன் என்ற பொல்லாப் பிசாசுகளும்; விதி, அதிர்ஷ்டம், ஊழ்வினை, கர்மா என்று சொல்லப்பட்ட மகா மூட சம்பிரதாயங்களும் ஒழிந்து விடுமானால், இன்றே இந்தப் பூலோகம் சுவர்க்கலோக மாறி விடும். அப்பொழுது நாம் தான் தேவர்கள்.

இந்தத் தேவ வாழ்க்கைக்கு இன்னும் சில நூற்றாண்டுகள் செல்லவேண்டும். அதுவரையில் இன்றுள்ள உலக சிருஷ்டியில் மனிதன் நினைக்கும் காரியங்களெல்லாம் சாத்தியமாகுமென்று உத்தரவாதம் சொல்ல முடியாது.

கந்தசாமி செட்டியார் தமது செல்வாக்கைக் கொண்டு பெருந்தொகை கடன் வாங்கிப், பர்மாவில் விரிவான தொழில் நடத்தினர். பர்மாவின் தற்கால நிலையில் கடன்பட்டார் நெஞ்சமும், அவர் தம் தொழிலும் என்ன நிலையில் இருக்கும் என்பதை விரிக்கத்

தேவையில்லை. கந்தசாமி செட்டியார் ஆள் தப்பித்ததே அரும்பாடாயிற்று. சொத்துக்கள் அனைத்தும் கடன் காரர் வசமாயின. சில உறவினர்களின் உதவியால் வீடு மட்டும் அவருக்கு மிஞ்சிற்று.

கந்தசாமி செட்டியாருக்கு இப்பொழுது ஒரு பெருஞ் சோதனைக் காலம். வீட்டிலே கோகிலம் சமைந்து, முழுகி இரண்டு ஆண்டுகளாகின்றன. வயது 15 ஆகிவிட்டது. காலந் தாழ்த்தாமல் கல்யாணம் செய்து கொடுக்கப்படவேண்டும்.

குடும்பம் நல்ல ஸ்திதியிலிருந்த பொழுது ஜெய-ராமனை மணமகனாக நினைத்திருந்தார். இனி அந்த நினைவை மாற்றினாலொழியச் சமூகத்திற்கியைந்த வாறு மணம் செய்து கொடுக்க முடியாது என்ற எண் ணம் தோன்றிவிட்டது.

ஜெயராமன் பெற்றோர்கள் பணக்காரரல்ல. அவர்கள் பக்கத்துக் கல்யாணச் செலவைக்கூட அவர் கள் சமாளித்துக் கொள்வது கஷ்டமான காரியம். எனவே பெண்ணுக்குப் பணம் கொடுத்துக் கல்யாணம் செய்வது என்பது அவர்களால் எந்த வழியிலும் முடி யாத செயல்.

பெண்ணுக்குப் பணம் வாங்கிக்கொண்டு செய்து கொடுப்பதைத் தவிர கந்தசாமி செட்டியாருக்கும் வேறு நல்லுணர்வு தோன்றவில்லை.

அந்தச் சிக்கலான பிரச்னை நெடுநாள் வரையிலும் தீராமலே யிருந்துவந்தது. "ஜெயராமனை ஒதுக்கித் தள்ளி விடுவதா?; கோகிலத்தின் ஆசைகளைப் புறக்கணித்து விடுவதா?" என்று அவர்கள் நினைக்கும் பொழுதெல்லாம் அவர்களுடைய இருதயமே வெடித்து விடுவதுபோல் தோன்றும்.

ஆயினும் என்ன? இறுதியில் ஊராரின் தூண்டுதலின் பேரில்—தாங்கள் சௌகரியமாக வாழ வேறு வழியில்லையே என்ற தந்நல நோக்கத்தின் பேரில், கோகிலத்தைப் பலி கொடுத்து விடுவது என்றே தீர்மானித்து விட்டனர்.

3

கோகிலம் ரொம்ப-ரொம்ப மனக்கோட்டை கட்டியிருந்தாள். ஸ்ரீமான் ஜெயராமன் செட்டியார் தனக்கு வாழ்க்கைத் துணைவராக ஏற்பட்ட பிறகு எப்படியெல்லாம் குடித்தனம் செய்ய வேண்டுமென்று 'பிளான்' போட்டிருந்தாள். தங்களை 'வேறு' வைத்த பிறகு சமையற்காரன் சேர்க்கக்கூடாதென்றும், எல்லா வேலைகளையும் தானே பார்த்துக்கொள்வதென்றும், தனக்கு உதவியாகக் காய்கறி வாங்கி வருதல், அவற்றை நறுக்கித் தருதல் போன்ற சில்லரை வேலைகளில் மகாராஜ ராஜஸ்ரீ கணவனுரையும் பங்கெடுத்துக் கொள்ளுமாறு (அன்பினல்) நிர்ப்பந்தம் செய்துவிடுவது என்றெல்லாம் நினைத்திருந்தாள். பத்திரிகை

படித்துக் கொண்டிருப்பாள். அதிலே ஏதோ சில தம்பதிகள் பெயர் வெளிவந்திருக்கும். உடனே 'ஜெயராம-கோகிலம்' என்று தங்களுடைய பெயரை அடிக்கடி பத்திரிகைகளில் வெளிவருமாறு செய்து கொள்ள வேண்டுமென்றும், ஜெயராமனின் தலைமையிலே பெண்கள் சுதந்திரம், மாதர் கடமை என்பன போன்ற விஷயங்களைப்பற்றிப் பல கூட்டங்களில் தான் பிரசங்கம் செய்ய வேண்டுமென்றும், தனது தலைமையில் சமூக சீர்திருத்த விஷயங்களை அவரைப் பேசச் செய்ய வேண்டும் என்றும் அவள் மனதில் ஆசை மூளும். அவரோடு டென்னிஸ் ஆடப்போவது, உலக யாத்திரை செல்வது, மகாநாடுகள், பொருட்காட்சிகள் முதலியவற்வைப் பார்வையிடுவது, சினிமாவுக்குப் போவது, ஒரு பேபி ஆஸ்டின் கார் வாங்கி அதிலே அவரைப் பக்கத்தில் வைத்து, தான் பழகிக்கொண்டு அந்தக் காரை ஓட்டுவது என்றெல்லாம் அவள் போட்டிருந்த திட்டங்களுக்குக் கணக்கு வழக்கே யில்லை.

எப்பொழுதாவது அவளுடைய பழைய புஸ்தகங்களை யெடுத்துப் பிரிப்பாள். முன்பக்கத்தில் அவள் பெயர் எழுதப்பட்டிருக்கும். அதற்கு மேலே ஜெயராமன் குறும்புத்தனமாகத் தன் பெயரை எழுதியிருப்பான். கோகிலம் அதைப் பார்க்கும்பொழுது அவனுடைய சிரித்த முகம் அந்தப் பெயர்களினூடே தோன்றிக்கொண்டிருக்கும். அவன் தனது ஆட்காட்டி விரலை உதடுகளின்மேல் வைத்துக்கொண்டு கொஞ்சு

தலாகச் 'சீட்டி' அடிப்பான். அவள் பெருமூச்சு விடுவாள்.

அண்டாவிலே தண்ணீர் ரொப்பியிருக்கும். கோகிலம் குளிப்பதற்குச் செல்வாள். தண்ணீருக்குள்ளே அவனுடைய வடிவம் தோன்றும். ஆவலோடு அதையே நோக்கிக் கொண்டிருப்பாள். ஜலத்தின் அலையிலே அவளைக்கண்டு அவன் ஆடி ஆடி நகைப்பான். அப்படியே பிரேமை கொண்டுவிடுவாள் கோகிலம். அந்த நிலைமையிலே எவ்வளவு நேரம் இருந்தாளென்று அவளுக்கே தெரியாது.

பல்லாங்குழிப் பலகையைப் பார்ப்பாள். அதில் தானும் ஜெயராமனும் ஆடிய ஆட்டமெல்லாம் ஞாபகத்துக்கு வரும். அவன் போனது முதல் தாயப் பலகையும் பல்லாங்குழியும் ஓய்ந்து கிடப்பதும், வேறு யாருடனும் விளையாடத் தனக்குப் பிடிக்காமலிருப்பதும் அவளுக்குத் தோன்றும்.

இரவு, நித்திரையிலேயிருப்பாள். ஜெயராமன் வந்து எங்கோ அழைப்பதாகக் கனவு தோன்றும். திடீரென விழித்து நோக்குவாள். காலடியிலே ஜெயராமன் நிற்பது போலிருக்கும். கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்து பார்ப்பாள். அந்தத் தூண் மறைவிலே போய் அவன் ஒளிந்து கொள்வான். கோகிலமும் தூணுக்கருகில் செல்வாள். அரவங் கேட்டுப்பக்கத்திலே துயில்வோர் விழித்தெழுந்து

விளக்கைத்தூண்டுவர். பிரேமையில் மயங்கிய கோகிலம் பிரக்ஞை பெற்றுப் படுக்கையிலே வந்து விழுவாள். வெட்கத்தால் அவள் வதனம் சிவந்து போகும். ஏதோ சாமி கோளாறு இருக்கிறதென்று வீட்டிலே பிறகு மந்திரோச்சாடனம் வகையராக்களும் நடந்தேறும்.

பூரணச்சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் வாசலிலே யிருந்து எல்லோரும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். பால்போன்ற அதனுடைய கிரணம் எல்லோருக்கும் பெரும் மகிழ்ச்சியையளிக்கும். ஊர்க் குமரிகளெல்லாம் முற்றத்திலே யிருந்தும், கோவில் வாசலிலே யிருந்தும் உல்லாசமாக உரையாடிக்கொண்டிருப்பார்கள். அந்தக் குளிர்ச்சி நிறைந்த மோஹனச் சந்திரன் கோகிலத்தை மட்டும் வடவாமுகாக்கினியாகத் தகித்து விடும்.

கோகிலத்தின் நிலைமை இவ்வாறிருக்க, இதை விட மகாமோசமானதாயிருந்தது ஜெயராமன் விஷயம்.

கணக்கு எழுதிக் கொண்டேயிருப்பான். கோகிலத்தின் நினைவு வந்து விடும். இடையிடையே 'கோகிலம்' 'கோகிலம்' என்று கணக்கிலேயும் எழுதித்தீர்த்து விடுவான். புரோ நோட்டு எழுதச்சொல்வார் ஏஜண்ட். ஆசாமிபெயர் கோகிங் சைங் அல்லது கோபிநாத் என்று இருக்கும். அவன் என்ன செய்வான், பாவம்! 'கோகிலம்' என்று பேனு வெகு சீக்கிரம் எழுதி விடும்.

இப்படியே அந்த இரண்டு ஆண்டுகளும் ஒரு வாறாய்க் கழிந்தன.

* * *

தனக்கு வேறிடத்தில் கல்யாணம் பேசப்போகிறார்கள் என்று தெரிந்ததும், கோகிலத்தின் நிலைமை என்னவாகியிருக்குமென்பதை நேயர்கள் யூகித்துக் கொள்ள வேண்டியதுதான். அவளுடைய மனம் இடிந்து போய் விட்டது. சர்வாங்கமும் ஒடுங்கிப் போய்விட்டன.—இப்படித்தான் சுருக்கமாகக் கூற முடியும்.

தாயோடு மன்றாடினாள். தந்தையிடம் சாடையாகத்தெரிவித்தாள். ஒன்றும் பிரயோஜனமில்லை. விஷயம் தலைக்கு மேலே போய்விட்டது. 'பைத்தியக் காரப்பெண்' 'அசடு' என்ற பட்டங்கள் மிஞ்சின.

* * *

மாங்குடியை யடுத்துத் தேனூர் என்றொரு சிற்றூர் இருந்தது. அங்கே பெரும்பான்மை நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் அவர்களை யொட்டி வாழ்ந்த பல்வேறு மக்களும் வாசஞ் செய்துவந்தனர்.

தேனூரிலே செல்வபதி யென்றொரு சீமான். மலேயா, செய்கோன், பர்மா, இலங்கை முதலிய தேசங்களில் ஏராளமான தொழில்கள் அவருக்குண்டு.

அவருக்கு அழகப்பன் என்ற ஒரே ஒரு புத்திரன் மட்டும் இருந்தான். அவனுக்கு வயது இருபது தான் இருக்கலாம். விவாகம் ஆகி, மனைவி இறந்து விட்டாள். செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்தவனாதலால் பிஞ்சிலே மைனர் ஆட்டம் ஆடிப் பெயர்போன பேர்வழியாயிருந்தான். மேக நோயும் க்ஷய ரோகமும் அவனை ஆட் கொள்வதில் பெரும் போட்டி போட்டன.

இந்தப் பூமானுக்கு இரண்டாந்தாரமாகக் கோகி-லத்தை நிச்சயதார்த்தம் செய்தனர்.

ஜாம் ஜாம் என்று பாண்டு (Band) வாத்தியம் ஓர் புறமும், மேளம் ஓர் புறமும் முழங்கின. தடபுடலான ஆடம்பரத்தோடு, நல்ல சுபயோக சுபதினத்தில், மாங்குடிக் கந்தசாமி செட்டியார் வீட்டில் திருப்பூட்டு வைபவம் நிறைவேறிக் கொண்டிருந்தது. மாங்கல்யம் ஏந்திய தாம்பாளத்தை மாமக்காரர் எல்லோரிடமும் நீட்டி, அவர்களின் ஆசீர்வாதம் பெற்றுச் சென்றார். குறிப்பிட்ட லக்கினத்திலே அலங்காரமாக ஆடையணிந்திருந்த ஒரு தொண்டு கிழவர் மாங்கல்யப் பெண்கள் மங்கலமொழி கூறவும், வாத்தியக்காரர் கெட்டி மேளம் வாசிக்கவும் கோகிலத்தின் கழுத்திலே திருப்பூட்டினார்.

அப்பொழுது இரவு ஒரு மணி. மூன்று மணிக்கெல்லாம் மணவறைச்சடங்குகளெல்லாம் முடிந்து

விடவேண்டுமென்று ஏற்பாடு. (பஞ்சாங்கத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தும், மற்றச் சடங்குகளைச் சாவகாசமாக நடத்த நாள் பொருந்தவில்லையாம்! ஆகவே, அவசரம், அவசரமாய் அந்த இரவு நேரத்திலேயே எல்லாச்சடங்குகளையும் முடித்து விடுவது எனத் தீர்-மானித்தனர்!) எனவே, காரியங்களெல்லாம் துரிதமாய் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

திருப்பூட்டு வைபவம் முடிந்து, மாப்பிள்ளை குதிரையேறி, ஊர் ஆலத்தி எடுத்து வந்து, மண வறைச்சடங்கு நிகழ்ந்து கொண்டிருந்தது.

மணப்பெண் வழக்கத்தைவிட அதிகமாகத் தலையைக்குனிந்து கொண்டிருந்தாள். புரோகிதர்கள் வளர்த்திருந்த ஹோம குண்டத்தினின்றும் எழுந்த புகை மேக மண்டலம் போல் மணப்பந்தல் முழுதும் சூழ்ந்து கொண்டது.

அப்பொழுதே புதிதாகப்பார்ப்பவர்கள் போல வியப்பே வடிவாகப் பல பெண்டுகள் மணவறையைச் சுற்றிலும் நின்று கொண்டிருந்தனர்.

" ஆருடி பெண்ணுக்கு சோடிச்சது?" என்ருள் ஒருத்தி.

தனது முகவாய்க்கட்டையில் கையை வைத்துக் கொண்டு, ஆச்சரியத்தை வெளிப்படுத்திய வண்ணம், " இதன்னடி யாத்தா; கர்நாடகம். நெத்திச்சுட்டியுங் கருநாகமும் இப்ப ஆர் வைக்கிருக? மொகமுந்

தலையுங் கொஞ்சங்கூடத் தெரியலையே—" என்றாள் மற்றொருத்தி.

"பாருங்கடி யாத்தா, நவநாகரிகப் பெண்டுகளா! பழைய காலத்து நகைய எவ்வளவு ஓவியமாருக்கு!" என்று பெருமை பாராட்டிக்கொண்டாள் கொஞ்சம் வயதான ஓர் ஸ்திரீ.

"பொண்ணு யார(ங்) அப்படித் தலையைக் குமிஞ் சிக்கிணுருக்கு? கோகிலந்தானு, அவ? எனக்குக் கொஞ் சஞ் சந்தேகமாருக்கே?" என்றாள் ஓர் நங்கை.

"போடி, சந்தேகப்பிராணி! எல்லாம் ஒனக்கு சந் தேகந்தானே!" என்று அவளைக் கன்னத்திலிடித்தாள் அப்பொழுதுதான் தூக்கத்தினின்றும் எழுந்து வந்த ஒருத்தி.

மணவறைச் சடங்கு முடிந்து, பெண்ணும் மாப் பிள்ளையும் அரசாணிக்கால் சுற்றி வந்தனர்.

"நல்லாய்ப் பாருங்கடி; நல்லாய்ப் பாருங்க. கோகி லந்தானு அவ!" என்று பட பட வென மொழிந் தாள் முன்னர் சந்தேகப்பட்ட அந்த மாது.

அந்தச் சப்தம் மணப்பெண் காதிலே நுழைந்தது; திடுக்கிட்டு அவள் நிமிர்ந்து நோக்கினாள்.

அதே ஸமயம் மற்றப் பெண்களும் 'அடியாத்தே; படுமோசம்!' என்று கூவினார்கள்.

வெவ்வேறு வழிகளில் கவனம் செலுத்தியிருந்த எல்லோரும் ஏககாலத்தில் மணப்பெண்ணைக் கூர்ந்து நோக்கினர்.

மணப் பெண்ணின் தாயார் ஓடிவந்து அவளைப் பார்த்ததும் "ஐயோ, கடவுளே!" என்று கூவி அப்படியே மூர்ச்சையானுள்.

மாப்பிள்ளையின் தாயார், "படுபாவிகளா; இப்படியா மோசம் செய்ய வேண்டும்?" என்று அலறிக் கொண்டு ஓடி வந்தாள்.

மணப்பந்தல் அல்லோல கல்லோலமாய் விட்டது.

"என்ன ஐயா இது? அயோக்கியத்தனமா யிருக்கிறது; யாரிடத்தில் செய்வது இந்த மோசமெல்லாம்?" என்று துடி துடித்தார் மாப்பிள்ளையின் தந்தை.

கந்தசாமி செட்டியாருக்கு ஒன்றும் தோன்றவில்லை. உண்மையில் ஏதோ பெரும் மோசம் நடந்து விட்டது. கோகிலம் எப்படியானுள் என்று தெரியவில்லை. அவரும் உள்ளம் நடுங்க, உடல் பதற மணப் பெண்ணினிடம் ஓடிவந்தார்.

அந்தப் பெண்ணைப் பார்த்ததும், அவருடைய கோபமும் ஆக்கிரமும் கட்டிலடங்காமல் பெருகிவிட்டன. வெறிகொண்டவர் போல் ஒரு கழியை எடுத்துக் கொண்டு "யாரடி, வேசை மகள்?" என்று மணப் பெண்ணை நோக்கிப் பாய்ந்தார்.

4

ஸாரதாச் சட்டம் பாஸ் (Pass) ஆன ஆரம்ப காலத்திலே செட்டிநாட்டில் நிகழ்ந்த குழந்தை மணங்கள் கணக்கிலடங்கா.

மக்கள் காயம் நிலையற்றது என்பதைச் செட்டிநாட்டு மக்கள் எவ்வளவு தூரம் உணர்ந்திருக்கின்றனர் என்பதைக் காட்டிக்கொள்ள அது ஏற்ற காலமாயிருந்தது.

"இந்தச் சரீரம் நீர்மேற் குமிழி. குழந்தைகளுக்குப் பதினெட்டு வருஷம், பதினறு வருஷம் ஆகும் வரையில் யார் இருப்பார்களோ? யார் போவார்களோ? நேற்றிருந்தார் இன்றில்லை யெனும் பெருமையுடைத்து இவ்வுலகம். ஆகவே நமது கண் முன்னடியே நமது குழந்தைகளுக்குக் கல்யாணம் செய்து, கண் குளிரப் பார்த்து விடவேண்டும்" என்று பல பெற்ரேர்கள் தீர்மானம் செய்து விட்டனர்.

"கல்யாணத்தை முடித்து விட்டால், சரி" என்ற நோக்கமே அதிகரித்துவிட்டமையால், மணமகன் மணமகளுடைய பொருத்தம் அதிகமாகக் கவனிக்கப்படவில்லை.

அப்படிக் கல்யாணம் செய்து கொடுக்கப்பட்ட பெண்களில் தேனூரில் செல்வபதி செட்டியார் வீட்டுக்கு அடுத்த வீட்டு ஞானம்பாளும் ஒருத்தி.

ஞானம்பாளின் பெற்றோர்கள் பெரும் பணக்காரர்களுமல்ல. ஏழைகளுமல்லர். கௌரவமாக வாழ்ந்து வந்த குடும்பத்தார். ஞானம்பாள் அவர்களுக்கு ஏக புத்திரி. ஸாரதா சட்டத்திற்காக அவளுடைய குழந்தை வயதில் தங்கள் கண் குளிர அவளுக்கு மண முடித்தனர். அப்பொழுது அவளுக்கு வயது எட்டு.

பயல் படுசுட்டி. கல்யாணம் முடிந்த 6, 7 மாதங்களில் ஒரு நாள் சில சிறுவர்களோடு குளத்துக்கு நீராடச் சென்றான். மழை பெய்து குளங்களெல்லாம் நீர் நிரம்பி யிருந்தன. பையன்கள் ஒருவனோடு ஒருவன் நீந்துவதில் போட்டி போட்டுக் குளத்தின் ஆழமான பாகத்திற்குச் சென்றுவிட்டனர். திரும்பிவரும்பொழுது மற்ற சிறுவர்களெல்லாம் பெரும் பிரயாசையோடு தட்டுத்தடுமாறி வந்துவிட்டனர். ஞானத்தின்கணவனால் வரமுடியவில்லை. இவன்தான் அதிகதூரம் சென்றவன். கை சோர்ந்து விட்டது. மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குகிறது. திக்கு முக்காடிப் போய் உதவிக் கழைத்தான். ஒரு பையனும் போகமுடியவில்லை. வேறு மனிதர்களும் தென்படவில்லை. சில சிறுவர்கள் வீட்டில் போய் ஆள் அழைத்து வருவதாகச் சொல்லி ஓடினார்கள். அங்கு நிற்கப் பயந்து மற்ற சிறுவர்களும் ஒவ்வொருவராய் ஓடி விட்டனர்.

அந்தோ! பரிதாபம். சில விநாடிகளில் அப் பாலகன் கரைக்கு வர முடியாமல், குளத்தின் ஆழத்திலே முழுகி விட்டான்.

ஓடிய சிறுவர்கள் வீட்டில் போய் தகவலைச் சொல்லவும், எல்லோரும் அலறி அடித்துக்கொண்டு ஓடிவந்தனர். பையனுடைய பிரேதந்தான் கிடைத்தது.

பாவம்; பச்சிளம் பாலகன். "கல்யாணம் என்றால் என்ன? மனைவி எதற்கு?" என்பதை அறிந்திராத இளமைப் பருவத்தில், ஒரு பச்சிளம் பாவையின் வாழ்வை அடியோடு பாழ்படுத்திவிட்டு இவ்வுலகினின்றும் மறைந்து கொண்டான். அந்தச் சிறுவனின் உயிரைக் கொள்ளை கொண்ட அத் தடாகம், இன்னும் மலர்ந்திராத ஓர் பைங்கொடியின் வாழ்க்கையையும் பலி வாங்கிக்கொண்டது; எத்தகைய பாவத்தையும் அறியாத ஓரிளமானின் சகல ஸுகானுபோகங்களையும் கொள்ளை கொண்டுவிட்டது.

ஞானத்தின் பெற்றோர்களும் ஓடி வந்தனர். உள்ளமும் உடலும் துடிதுடிக்கப் பதறி அழுதார்கள்; கதறினார்கள்; தரையிலே வீழ்ந்து மோதுண்டனர். "பொம்மைக் கல்யாணத்திலே பூரிப்படைந்தோமே, மகளே! இன்று உன் வாழ்வைக் குலைத்து விட்டோமே; சட்டத்திற்குப் பயந்து உன் சந்தோஷத்தை யெல்லாம் பலிகொடுத்து விட்டோமே; எங்கள் புத்தியைச் செருப்பாலடிக்க; சண்டாளன் காலன் அறியாப் பெண்ணென்றும் கருதினானில்லையே" என்று கண்களும் மனமும் வீங்கப் புரண்டு புரண்டழுது புலம்பினர். என்ன புலம்பி யாவதென்? மாண்டார் மீள்வதுண்டோ?

பங்காளிகள் கூடி ஜாதி விதிப்படி சடங்குகளை நிறைவேற்றினர்.

ஞானம் சொர்ண விக்கிரகம் போன்ற தங்கக் கொடி. அழகு வளர்ந்து வந்த ஓர் பூங்கொம்பு. குழந்தை வயதிலே அவளைப் பாழ்படுத்தி விட்டனர். ஜாதியின் பெயரால் அவளுடைய இன்ப வாழ்க்கைக்குச் சாவுமணி அடித்தாய்விட்டது. அந்தோ, கொடுமை! கொடுமை ! ஜாதியாம் ! சமூகமாம் !

இதனால் ஏற்பட்ட ஏக்கந்தானோ; என்னவோ? ஞானத்தின் தந்தையும் அடுத்த சில மாதங்களில் திடீரென மரணமானார்.

தாயும் மகளும் விதவைகளாகிப் பரிதவிக்கும் அக் குடும்பத்தின் நிலையை எழுதவும் வேண்டுமோ !

5

உலகத்தில் சந்தோஷமாயினும் சரி; துக்கமாயினும் சரி; அதனால் ஏற்பட்ட இன்ப துன்ப உணர்ச்சிகள் நெடுநாள் வரை ஒரே மாதிரியாக இருப்பதில்லை. வருடம் ஆக ஆக, அந்த உணர்வும் படிப்படியாகக் குறைந்து கொண்டே வரும் என்பது அனுபவ சித்தாந்தம். மேல் நிகழ்ச்சிகள் நடந்து வருடக் கணக்காக நாட்கள் ஓடி மறைய, மறைய, விதவைகளான தாயும் மகளும் (ஞானம்பாளும் அவள் தாயாரும்) தங்களின் மீள முடியாத துயரத்தினின்றும் ஆறுதல் பெறுவதற்குப்

படிப்படியான மனோபாவத்தைச் சிறிது சிறிதாகப் பெற்று வந்தனர். ஆயினும் அவர்கள் எவ்வளவு தான் கர்மத்தின் மீது பழியைப் போட்டுச் சிறிதளவு மனோ அமைதியைப் பெற்று வந்தாலும், அவர்களுடைய பரிதாபகரமான தோற்றம் அடிக்கடி பெரும் வியாகூலத்தை உண்டுபண்ணி வந்தது.

உலக இன்ப துன்பங்களின் சுழலிலே ஓரளவு அனுபவம் பெற்ற ஞானம்பாளின் தாயார், தான் விதவைத் தன்மையெய்தியது குறித்து அடைந்த துக்கத்தைக் காட்டிலும் தனது ஒரே மகளான ஞானம் வாழ்க்கை இன்பம் என்பதையே துளிக்கூட உணராதவளாய் விவரம் தெரிந்த நாள் முதல் விசனமே வடிவாகக் கண்ணீருங் கம்பலையுமாய்ப் பாயும் படுக்கையுமன்றி வேறொரு துணையும் அறியாதவளாய்க் காலங் கடத்தி வருவதைக் கண்டு நெஞ்சம் கலங்கினாள். அதைப்பற்றிய கவலை அவளுடைய உயிரை உறிஞ்சிக் கொண்டு வந்தது.

இந்த நிலைமையில் பல நாட்கள் கடந்தன.

ஒரு நாள் மாலை செல்வபதி செட்டியார் மகன் அழகப்பன் தன் வீட்டு மேல் மாடியில், வராந்தாவில், உலாவிக் கொண்டிருந்தான். அவனுடைய முதல் மனையாட்டி இறந்து அப்பொழுது சில நாட்கள் தான் ஆயின. ஆகவே அவன் கட்டாயமாய் வீட்டிலேயிருக்க வேண்டியதாயிற்று. இன்றேல், செட்டியாரவர்களை வீட்டில் காணுவது துர்லபம்.

செல்வபதி செட்டியார் வீடு கம்பீரமான பெரிய மாளிகை யாதலால், அதன் மேன் மாடியில் நின்று பார்க்கும் பொழுது இரு மருங்கிலும் உள்ள வீடுகளின் உள் முற்றங்கள் நன்ருகத் தோன்றும்.

அழகப்பன் உலாவிக் கொண்டேயிருந்தவன் தற் செயலாகத் தனது வீட்டின் இடது பக்கத்திலிருந்த ஞானம்பாள் வீட்டை நோக்கினன். அங்கே உள் வாசலை அடுத்து ஓர் பத்தியில் பருவமுள்ள ஒரு பெண்,

"வெள்ளைத் துணிபோர்த்தி மேனி யொடுங்கிப்போய்
ஆடரண மொன்றுமின்றி அழகு குறைவடைந்து
கண்ணீர் வடித்துக் கண்ணிரண்டும் வீங்கிப்போய்
அழகு நெடுங்கூந்தல் அங்கே தரையினிலே
சிக்குப் பிடித்து சீரழிந்துதான் கிடக்க
மங்கைப் பிராயம் வயது பதினைந்திருக்கும்
தங்கை டடுத்துத் தரையிற் கிடந்தாள் காண்"

என்றபடி தரையில் படுத்துக் கிடந்தாள். அழகப் பன் சில விநாடிகள் அப்படியே ஸ்தம்பித்தான். ஞானம்பாளைப் பருவமாகு முன்பு சில முறை அவன் பார்த்திருக்கிறான். அவளுக்குக் கல்யாணமாகு முன்பு சின்னஞ் சிறு வயதில் அவளோடு பலமுறை அவன் விளையாடியதுண்டு. பின்பு அவளுடைய கணவன் இறந் ததும் அவளை அதிகமாக வெளியில் விடவில்லை. பருவ மடைந்த பின்னர் தான் அவளுக்குத் தன் நிலைமை தெரிந்தது. அதன் பிறகு தான் மற்ற சடங்குகளை யும் நிறைவேற்றி அவளை அலங்கோலப் படுத்தினர்.

இந்தக் காலங்களில் அழகப்பன் அவளைப் பார்த்ததே கிடையாது. அடுத்த வீடாய் இருந்த போதிலும் பெரும்பான்மையாக அழகப்பன் ஊரில் தங்கியிருந்த தில்லை யென்பதே காரணம்.

ஆகவே அழகப்பன் இப்பொழுது தான் அவளை நன்ருகப் பார்த்தான். அவனை யறியாமல் இரக்கம் மேலிட்டது. 'ஐயோ பாவம்' என்று வாய் விட்டுக் கூறினன்.

* * *

மறு நாளும் அழகப்பன் மாடியை அடைந்து அடுத்த வீட்டு வாசற் புறம் நோக்கினன். அப்பொழுது அந்திபட்ட சிறிது நேரம். ஞானம் வாசல் பட்டியக் கல்லில், குத்துக்கால் போட்டு, உட்கார்ந்து வலது கால் பெரு விரலைத் திருத்திக் கொண்டிருந்தாள். கீழ்த் திசையிலே சந்திரன் உதயமாகி யிருந்தான். அவனுடைய பிரகாசம் பொருந்திய ஒளி வாசல் முற்றிலும் பரவி யிருந்தது. அந்த ஒளியின் அடியிலே வெள்ளைக் கலையணிந்த கந்தருவ மாது போல் ஞானம் விளங்கினள். சந்திரனின் தேய்வைக் கண்டு அவள் கவலையடைகின்ருளா?; அல்லது அவளுடைய சோபையற்ற வதனத்தைக் கண்டு சந்திரன் தேய்ந்துகொண்டு போகின்ருனு, என்று நிதானிக்க முடியாத நிலையில் அந்த இடம் காணப்பட்டது. குளிர்ந்த தென்றல் அப்பொழுது லேசாக வீசிக்

கொண்டிருந்தது. அவள் தோற்றத்திலே முற்றிலும் ஈடுபட்டுப் போனவனாய் அழகப்பன் தன்னை மறந்து நின்று கொண்டிருந்தான்.

அழகப்பன் துஷ்ட கிருத்தியங்களில் ஈடுபட்டவனாயிருந்தாலும் சிறிது அழகான தோற்றமுடையவன். உடலுக்குள்ளே பலவகை நோய்கள் மறைந்துகொண்டிருந்தாலும் தேகம் ஆஜானுபாகுவா யிருந்தது. மகா கோழையாயும் பெரும் பயங்கொள்ளித்தனமுடையவனாகவும் அவன் இருந்தும் வசீகர சக்தி அவனிடமிருந்தது.

எதனாலோ தூண்டப் பெற்றவளாய் ஞானம் தலையை நிமிர்த்தி மெல்லென மேலே நோக்கினாள். உடனே அழகப்பன் தனது பார்வையைத் தந்திரமாக அப்பால் திருப்பி வேறு எதையோ கவனிப்பவன் போல் இருந்துவிட்டான்.

தினமும் அழகப்பன் மாடியில் உலாவுவதை வழக்கமாகக் கொண்டு ஞானம் அறியாமல் அவளுடைய உருக்குலைந்த அழகைப் பருகி வந்தான்.

அழகப்பன் வீட்டிலே ஒரு வேலைக்காரக் கிழவி. மகா மாயாவி. அழகப்பனுடைய கையாள். அவனிடம் பெருத்த ஊதியம் பெற்றுக்கொண்டு பல ஏழைப் பெண்களைப் படுமோசத்தில் தள்ளிய கொடும்பாவி. அவளுடைய ஸாகஸ மொழிகளில் மயங்கித் தங்களு

டைய விலையில்லா மாணிக்கமாகிய கற்பை இழந்த பேதைகள் அனேகம்.

இந்தக் கைகாரக் கிழவி அழகப்பனுக்காக ஞானம்பாளின் பேரில் தனது மாய வலையை விரிக்கத் தொடங்கிவிட்டாள்.

பணம் பாதாளம் மட்டும் பாயும் என்பதில் அழகப்பன் பக்கா நம்பிக்கை கொண்டவன். ஆகவே இந்தப் புனித கைங்கரியத்திற்குப் பணத்தையும் சிறிது இறைத்தான்.

* * *

கூரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என் பார்கள். ஞானம் உலகமறியாப் பேதை. சூது வாதறி யாச் சிறுமி. விரைவில் எதையும் நம்பும் சுபாவி. அந்த மகேந்திர ஜாலக் கிழவியின் பசப்பு மொழிகள் எளி தில் அவளை மயக்கிவிட்டன. இனித்த மொழிகள் பேசி அக்கிழவி ஞானத்தின் மனதைக் கவர்ந்து கொண்டாள். அவளுடைய மாயவலையிலே அப் பேடன்னம் முற்றிலும் வீழ்ந்து விட்டது. ஞானத்தின் வீட்டு முகப்பில் குடியிருந்த ஒரு ஸ்திரீயும் அக் கிழவியின் கையாளாக இருந்து வேலை செய்தாள்.

வளர்ப்பானேன்! பக்குவமான சுற்று சார்புக ளால் ஞானம் தன்னிலை மறந்தாள். வாழ்க்கையின்பமே உணர்ந்தறியாத அவளுக்கு ஏதோ பேரின்பம்

கிடைப்பது போலிருந்தது. அழகப்பன் பலவகையான மாயா ஜாலங்களெல்லாம் செய்து அம் மடக்கொடியை முற்றிலும் மயக்கிக் கொண்டான்.

மலர்ந்தும் (சமூகத்திலே) பயன்பெருத பரிமள மான ஓர் புஷ்பம் ஒரு காமுகன் கையினுல் கசக்கப் பட்டுக்கொண்டிருக்கிறது. குப்பையிலே கிடந்த ஒரு மாணிக்கம் சாக்கடையிலே போய்க் கொண்டிருக் கிறது.

சில தினங்கள் ரகசியமாக இன்பம் அனுபவித் துக் கொண்டு வந்த ஞானத்தின் தலையிலே ஓரு நாள் பேரிடி விழுந்தது. வயிற்றில் ஏதோ நோவு எடுப்ப தாகத் தோன்றிற்று. ஊளச்சலும் சோர்வும் உண்டா யின. உடல் தளர்ந்தது. கர்ப்பம் உண்டாய்விட்ட தாக அறிந்துகொண்டாள்.

6

விதவா விவாகத்தைப்பற்றிப் பிரசாரஞ் செய்ய நாட்டில் ஒரு சங்கம் ஏற்பட்டிருந்தது. வாலிபர்க ளெல்லாம் உணர்ச்சியோடு தீவிரமான தொண்டாற்றி வந்தனர். ஊருக்கு ஊர் பிரசங்கங்கள் செய்தும் மாஜிக் லாண்டர்ன் முதலியவை காண்பித்தும் வந்த தோடல்லாமல் சினிமாப் படங்களும் விதவா விவாக சம்பந்தமாகத் தயாரித்தனர். ஜனங்களுக்கு நாளுக்கு நாள் விதவா விவாக உணர்ச்சி அதிகப்பட்டுக் கொண்டு

வந்தது. எந்தப் புண்ணியவதி முதன் முதலாக மணி கட்டப்போகின்றாளோ என்று எல்லோரும் ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

*　　　　*　　　　*

ஞானத்தின் கர்ப்பத்தைச் சிதைத்து விடுவதற்கு அழகப்பன் பல உபாயங்களெல்லாம் கூறினான். தூது சென்ற கிழவி அவ்விஷயத்தில் பேருதவி புரிய முன்வந்தாள். ஞானத்தின் கண் இப்பொழுது தான் நன்றாய்த் திறந்தது. கர்ப்பத்தைச் சிதைத்தால் சிசுக்கொலையாவதோடு தன் உயிருக்கும் ஊறு ஏற்பட்டு விடலாம் என்று கருதினாள். வளரவிட்டாலோ உலக அபவாதம். "பழிக்கு அஞ்சுவதா?;பாபத்தை மேற்கொள்ளுவதா?" என்று அவளால் எளிதில் நிதானிக்க முடியவில்லை.

"பாவம் கண்ணுக்குப் புலப்படாத சமாசாரம். விதவை பிள்ளை பெற்றால் தனக்கு அவமானம். குடும்பத்துக்கு அவமானம். குலத்துக்கு அவமானம். மானம் பெரிது என்ற சமூகத்தில் ஒரு விதவை பிள்ளை பெற்று உயிர் வாழ்வதென்றால் அவள் பெண்ணல்ல; பெரும் பேய்; கொடிய மிருகம்; மானாவமானத்தை யெல்லாம் உதிர்த்துவிட்ட ஓர் புளியங்கட்டை."

"கற்பரசிகள் வாழ்ந்த நாட்டில் நான் நெறிதவறி விட்டேன். கண்டோர் நகைத்துக் காரியுமிழ விபசாரியாகி விட்டேன். கண்ணியமான குடும்பத்திற்குப் பெரும் சனியனாய் முளைத்தேன். குடும்பத்தின் கௌர

வத்துக்கு இழுக்கு நேர்ந்துவிடும் முன்னதாகவே எனக்கு ஒரு முடிவைத் தேடிக்கொண்டு விடுகின்றேன். அதுவே நான் செய்ய வேண்டிய கடமை. பகவான் எனது பாவங்களை மன்னிக்கட்டும்.''

''உலகத்தில் ஏற்படும் பழிக்காக சிசுஹத்தியும் தற்கொலையுமான இரண்டு கொலைகளைச் செய்யும் துணிவை நான் மேற்கொள்ளுகின்றேன். பெண்கள் மட்டும் தனியாகச் செய்ய முடியாத குற்றத்திற்கு சகல பழியும் பாவமும் தண்டனையும் அவர்களையே சாருகின்றன. பகவான் கருணைக் கடல் என்று சொல்லுகிறார்கள். பகவத் நம்பிக்கை அதிகமாக உள்ள இந்த நாட்டில்தான் பெண்களுக்கு ஸகிக்க முடியாத அநீதிகள் இழைக்கப்பட்டிருக்கின்றன. இளமையின் செழுமையிலும் வாலிபத்தின் திமிரிலும் பொய் மோகத்தின் மையலிலும் மயங்கிஅறிவிழந்து பின்னர் தனது குற்றங்களுக்காக வருந்தித் தவித்து அல்லும் பகலும் புலம்பிக் கொண்டிருக்கும் ஒரு பாரத புத்திரியை அவளுடைய குற்றங்களுக்காக மன்னித்து அவளுடைய பாபங்களின் கறையைப் போக்கி பாரத தேவி அவளை ஏற்றுக்கொள்ளட்டும்.'

என்று பலவாறாக ஞானம் தனக்குள்ளே பரிதபித்துக்கொண்டிருந்தாள்.

கோகிலம் ஞானத்திற்கு நெருங்கிய உறவு. ஞானத்துக்குத் துணையாகவும் அவளுக்கு ஆறுதலளிப்

பதற்கும் கோகிலம் அடிக்கடி தேனூருக்கு வருவதுண்டு. இருவரும் பரஸ்பரம் மனப்பூர்வமான அன்புடையவர்கள். ஒருவருடைய சுகதுக்கத்தை மற்றவருக்கு நேர்ந்ததாகக் கருதும் பான்மையினர். ஆயினும், கோகிலம் தேனூரில் தாமதிப்பதில்லை. தன் தாயுடன் வந்து உடனே திரும்பிவிடுவாள்.

ஞானம் அழகப்பன் வலையில் வீழ்ந்த பிறகு கோகிலம் இப்பொழுதுதான் முதன் முறையாக வந்திருந்தாள். மிக நெருங்கிப் பழகிய அளவில் ஞானத்தின் நிலைமையைக் கோகிலம் ஒருவாறு ஊகித்துக்கொண்டாள். ஞானம் கோகிலத்தின் முன்னால் தனது கவலை, ஏக்கம், துயரம், சோகம், நோவு முதலிய எதையும் மறைத்துக்கொள்ள முடியவில்லை. அவளுடைய உள்ளத்தைப் பளிங்கு போல முகம் காட்டிக் கொண்டிருந்தது.

அன்று மாலை. ஞானமும் கோகிலமும் சமையல் கட்டில் தனியாக இருந்தனர். மற்றவர்களெல்லாம் வீட்டுத்திண்ணையிலேயிருந்து உரையாடிக் கொண்டிருந்தனர். ஞானத்தின் பாட்டி ஒருத்தி கொஞ்ச தூரத்துக்கப்பால் முற்றத்தின் நடையிலிருந்து 'சொள் சொள்ளென்று' இருமிக்கொண்டிருந்தாள். கோகிலத்துக்கு நல்ல சமயம் கிடைத்தது. ஞானத்தினிடம் மெதுவாக விசாரித்தாள். ஞானம் எதையும் மறைக்கவில்லை. அவளால் மறைக்கவும் முடியவில்லை.

தனது உண்மைத் தோழியை முற்றிலும் நம்பினாள். தன் துர் நடத்தைக்காகத் துடிதுடித்து ஆற்றுவெள்ளம் போலக் கண்ணீர் சோரப் பதறித் தவித்து சாங்கோபாங்கமாக எல்லாவற்றையும் கோகிலத்தினிடம் விளக்கமாகக் கூறினாள். மேலும் அவள் சொன்னாள்—"தோழீ! என்பேரில் குற்றந்தான். மன்னிக்க முடியாத குற்றம். நான் பெரும் பாதகியாகி விட்டேன். குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பாக ஆகிவிட்டேன். மானமுள்ள குலத்திற்கு என்றும் தீராத பழியாகிவிட்டது. இனி நான் இந்த உடம்பைச் சுமந்து என்ன பயன்? சண்டாளத்வம் பெற்ற இந்தத் தேகம் மண்ணோடு மண்ணாய்ப் போகட்டும். குலத்துக்கு இழிவைத் தேடிய இந்தக் கட்டை வெந்து சாம்பராகட்டும். நான் பிராணத் தியாகம் செய்து கொள்வதாக நிச்சயித்து விட்டேன். இந்த உலகிலே நீ தான் எனக்கு உண்மையான ஸ்நேகிதி. எல்லாவற்றையும் உன்னிடம் கூறினால்தான் ஆறுதல் உண்டாகுமென்று நினைத்தேன்."

இவ்வாறு ஞானம் கூறியதைக் கேட்டதும், கோகிலத்தினாலும் துக்கம் தாங்க முடியவில்லை.

"அழாதே ஞானம்; அழாதே. வருந்துவதில் பயனென்ன? உண்மையாக நீ கெடவில்லை. சமூகம் உன்னைக் கெடுத்தது. சமூகத்தில் உள்ள தூர்த்தர்கள் உன்னைக் கெடுத்தார்கள். சமூகத்தைக் கட்டியழும் பெரியவர்கள் உன்னைக் கெடுத்தார்கள். அறியாப் பரு

வத்திலே மணம் செய்து அனுபவிக்க வேண்டிய பக்குவ காலத்திலே சித்திரவதை செய்யச் சொல்லி எந்த சாஸ்திரம் சொல்லியிருக்கிறது? அதற்காக நீ இவ்வாறெல்லாம் நினைக்கக் கூடாது. தற்கொலை என்பது மகா பாவமான காரியம். அதை மனதிலுலேயும் இனி நினையாதே, ஞானம்'' என்று அவளுக்குப் பல நீதிகளைப் போதித்தாள். இருவரும் நீண்ட நேரம் வரை வார்த்தையாடிக் கொண்டிருந்தனர்.

கோகிலம் தேனூர் வந்துபோன சில தினங்களில் தான் தேனூர் செல்வபதி செட்டியார் மகன் அழகப்பனுக்கு அவளை இரண்டாந்தரமாக நிச்சய தார்த்தம் பண்ணினர். ஜெயராமனிடம் தனது இதயத்தைப் பறிகொடுத்துவிட்ட கோகிலம் அந்த நிச்சயதார்த்தம் நடைபெறுமலிருக்கப் பெரிதும் முயன்ருள். ஒன்றும் பலனளிக்கவில்லை. எனினும் ஞானத்தைக் கெடுத்த பாதகன் அழகப்பன் என்பதை அவள் தெரிந்திருந்தும் அதைப்பற்றி அவள் ஒன்றும் வெளியிடவில்லை. வெளியிடுவதனுலும் ஒருவிதப் பயனும் ஏற்படாது என்பது அவளுக்குத் தெரியும்.

விவாக ஏற்பாடுகளெல்லாம் துரிதமாக நடைபெற்றுக் கல்யாண நாளும் நெருங்கிற்று.

கோகிலம் துணிகரமான சில ஏற்பாடுகளை ரகசியமாகச் செய்துவிட்டு எப்பொழுதும் போலவே யிருந்தாள்.

7

"தோழி! நீ செய்யப்போகும் உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகின்றேன். எனக்காக உன்னையே நீ தத்தம் செய்துகொண்டு விட்டாய். நேருக்கு நேரே நீ எவ்வளவோ இழி சொற்களைக் கேட்க வேண்டி வரும். பொல்லாத வசை மொழிகளை யேற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். சபையிலே பெரிதும் அவமானப்பட வேண்டி நேரிடும். துஷ்டர்கள் அடிக்கவும் உதைக்கவும் கூடச் செய்வார்கள். கேவலம் என் பொருட்டு அவ்வளவையும் நீ ஸகித்துக் கொள்வதென்றால் அப்பேர்ப்பட்ட உயிர்த் தோழிக்கு அவ்வளவு பெருந் துன்பங்களைக் கொடுத்து நான் என்ன வாழ வேண்டியிருக்கிறது. எனக்கும் இந்த உலக வாழ்வு பிடிக்கவில்லை. நீ செய்த முடிவையே நானும் செய்துவிட்டேன். ஈஸ்வரனுடைய திருவடியை அடைந்து அடுத்த ஜன்மத்திலாவது நல்ல சுகமான பிறவியைப் பெறுவோம்."

"ஆ பிரியே; இந்த அற்ப உதவி செய்ய நீ அனுமதிக்க மாட்டாயா? உனக்காக நான் என்ன தியாகம் செய்துவிட்டேன். எப்பொழுதும் அந்த வசை மொழிகளையும் இழி சொற்களையும் நான் கேட்க வேண்டியவள் தானே. கடைசி காலத்திலாவது எனது ஸிநேகிதையைக் காப்பாற்ற இப்படிப்பட்ட ஒரு உதவியாவது செய்தோம் என்ற ஆத்ம திருப்தியாவது எனக்கு ஏற்படக்கூடாதா? கோகிலம்! நீயே சொன்ன யோசனையை நீயே மறுப்பது அழகா?"

"ஞானம்! எனக்காக நீ இப்படிப்பட்ட ஸங்கடத்தில் மாட்டிக் கொள்வதை நான் எப்படிப் பொறுப்பேன்? நீ செய்வது எனக்கு மகத்தான உதவி. பிராண பிச்சை மாதிரி. பெண் வர்க்கத்துக் கெல்லாமே அது ஒரு பெரிய வழிகாட்டி. ஆனால் உனக்கு.......
...............உனக்கு ஞானம்! அதனால் எவ்வளவு துன்பங்கள் நேரிடும்? அதை நினைக்க வேண்டாமா?"

"கோகிலம், கவலைப்பட வேண்டாம். நான் செய்யப்போவது ஒன்றும் தியாகமில்லை. என்னுடைய சுய நன்மை தான் அதிலே அதிக மிருக்கின்றது. இறைவனருளால் வெற்றி பெற்றால் பாதாள நரகத்திலே அமிழ்ந்தித் தத்தளிக்கும் நான் தான் விடுதலை பெறுகின்றேன். உன்னுடைய தயாள குணத்தினுலும் சாதுர்யத்தினுலும் எனது துன்ப வாழ்க்கைக்குச் சாவு மணியடிக்கப் பெறுகின்றது. இந்த நிலையில் உன்னுடைய பெருந்தன்மையினுல் நீ வருந்துகிறாய். யோசிக்கும் பொழுது உனக்காக நீ இந்தக் காரியத்தைச் செய்யச் சொல்லவில்லை. மேலுக்கு உன் பெயரைக் கூறினுலும் என்னுடைய நன்மையைத்தான் அதிகம் பாராட்டி இதைச் செய்யச் சொல்லுகிறாய். எப்படியானுலும் கோகிலம்! நாம் இந்தச் சூழ்ச்சியை மேற்கொண்டே தீருவோம். நமது முயற்சி வீண் துன்பமாகவே முடிந்தாலும் செத்த பின்பு கேட்க வேண்டிய பழியை நேருக்கு நேரே கேட்டு விடுகின்றேன். தடை செய்யாதே கோகிலம்! என்ன தான் நேரிடுகிறதென்று பார்ப்போம்."

இந்த விதமாக ஞானம்பாளுக்கும் கோகிலத்துக்கும் ஒரு நாள் சம்பாஷணை நடந்தது.

*　　　　*　　　　*

ஜெயராமன் மலாய்நாடு போந்து இரண்டாண்டுகளுக்கு மேலாய் விட்டன. உயிரை மாங்குடியிலும் உடலை மலாய் நாட்டிலுமாக வைத்து அந்த இரண்டு ஆண்டுகளையும் தள்ளி விட்டான். ஊருக்குப் புறப்பட வேண்டிய வருஷம் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் சில மாதங்களில் கோகிலத்தைச் சந்திக்கலாம்.

"இப்பொழுது கோகிலம் எப்படி யிருப்பாளோ! திரண்டு பூத்த மோகனாங்கியாய்,....நவீன நாகரிக சிங்காரியாய்,....மன மோகன ஒய்யார அலங்கிர்த பூஷணியாய்,....கிள்ளையும் குயிலும் வெட்கிப் போகும்படியான கோமளாங்கியாய்...." என்று பல பல ரஸமான வர்ணனைகள் அவன் மனதிலே சதா சித்திரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்.

இந்த நிலைமையில் ஒரு நாள் கோகிலத்தின் தந்தையிடமிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது.

அதில் அவர் தம்முடைய கடைகள் கெட்டுப் போன விவரத்தையும், பொருளாதார நெருக்கடியையும் விரிவா யெழுதி, அதை முன்னிட்டுக் கோகிலத்தை அழகப்பனுக்கு நிச்சயித்திருப்பதையும் சுருக்கமாகக் குறிப்பிட்டு, "எல்லாம் ஊழ்வினையின்படியே நடக்கு

மாதலால், கவலைப்படலாகாது'' என்று ரொம்பவும் எழுதியிருந்தார்.

அக் கடிதத்தைக் கண்டது முதல் ஜெயராமன் பைத்தியம் பிடித்தவன் போலாய் விட்டான்.

''ஆமாமா! தலையில் மண்ணை வாரிப் போட்டீர்களே! பணந்தானா உங்களுக்குப் பெரிதாய் விட்டது! வேண்டிய பணம் நான் சம்பாதித்துத் தருவேனே! என்னைக் காக்க வைத்து, என் கோகிலத்தை எவனோ நேற்று வந்தவனுக்குக் கொடுக்கத் துணிந்து விட்டீர்களே!'' என்று தலையிலடித்துக் கொண்டான்.

''ஆ! கோகிலம்! நீயும் இதற்குச் சம்மதித்தாயா? நான் ஏழை தானே என்று எண்ணி விட்டாயா? அடி, கோகிலம்! என்னிடம் நீ காண்பித்த அன்பெல்லாம் வெறும் பசப்பு மொழிதானா?'' என்று ஏங்கினான்.

''அவள் என்ன செய்வாள்! பணத்தையே பெரிதென மதித்த வஞ்சகப் பெற்றோர்களின் கீழ் அப் பைங்கொடி என்ன செய்ய இயலும்? பெண் விரும்பிய கணவனை அடையச் சுதந்திரம் கொடுத்திருக்கிற ஜாதியா?''

''அவள் என்னிடம் உண்மையான காதல் கொண்டிருப்பாள் என்பது தான் என்ன நிச்சயம்? குழந்தைப் பிராயத்தில் கூடி விளையாடினோம் என்பதற்காகக் காதல் ஏற்பட்டு விட்டது, என்று சொல்ல முடியுமா? அவ்வாறு உண்மையான காதல் ஏற்பட்டிருக்குமாயின்

இன்னொருவரை நிச்சயம் செய்த பின்னும் அந்த உயிர் ஏன் இன்னும் தரித்திருக்கிறது ?''

''காதல்....! என்ன காதல் ! இழவெடுத்த காதல் ! இதெல்லாம் வெறுமனே கவிஞர்கள் கட்டு. காதலாம் ! தெய்வீகமாம் ! அண்டப்புளுகு ! தெய்வீக சக்தி இருந்தால், எனது காதல் ஏன் பாழாக வேண்டும் ? தெய்வீக சக்தி தேய்ந்து போய் விட்டதா ? அல்லது மண்ணிற்குள் புதைந்து போய் விட்டதா ? ''

—என்றெல்லாம் புலம்பினான். சரியான ஊணுறக்கமில்லை. வேலையிலே கவனமில்லை. தோழர்களோடு அளவளாவுவதும் ஓய்ந்து போய் விட்டது. கல்யாண நாள் நெருங்க நெருங்க, அவனுடைய மனம் இடிந்து கரைந்து கொண்டு வந்தது.

8

மாங்குடி கந்தசாமி செட்டியார் வீட்டில் கல்யாணப் பந்தல் பிரமாண்டமாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. மாப்பிள்ளை வீட்டாரும் வந்திறங்கி விட்டனர். ஊர் முழுவதும் ஏக கோலாகலமாயிருந்தது. கோகிலத்தையும் அவள் தோழிகள் சிலரையும் தவிர,எல்லோரும் சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்திருந்தனர்.

வாத்திய கோஷமும், வாண வேடிக்கைகளும், நாதஸ்வரக் கச்சேரி, சதுர்க் கச்சேரிகளும் ஊரைப் பிரமிக்கச் செய்தன. மாப்பிள்ளை அழைப்பு முடிந்து,

இரவுப் போஜனமும் நடந்தேறியது. இரவு ஒரு மணிக்குத் திருப்பூட்டும் வைபவம். ஆகவே காலா காலத்தில் கல்யாண விருந்தினர்கள் படுக்கையை நாடினர்.

இரவு மணி 11 ஆயிற்று. கல்யாண வீட்டில் ஒரு சிலர் தவிர எல்லோரும் நித்திரை போய் விட்டனர். மணப் பெண்ணின் தாயாரும் இன்னும் சில வயதான ஸ்திரீகளும் அன்று இரவு வைத்த சீர் வரிசைகளைப் பற்றி வம்பளந்து கொண்டு, திருப்பூட்டுக்கு வேண்டியவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

தேனூர் ஞானம்பாளும், அவள் தாயாரும் கூடக் கல்யாணத்துக்கு வந்திருந்தனர் !

மணப்பெண் கோகிலம் திடீரென்று "கொல்லைக்குச் செல்ல வேண்டும்" என்றாள்.

"நல்ல சமயமடி, யாத்கா" என்று பரிகாசம் செய்து கொண்டே இரண்டு மூன்று பெண்கள் அவளுக்குத் துணையாக வீட்டின் பின்புறம் சென்றனர்.

ஊர் முற்றிலும் அடங்கி விட்டது. எங்கும் நிசப்தமாயிருந்தது.

தெருக் கோடியிலே, அடுத்த வீதியின் திருப்பத்திலே, ஒரு மோட்டார் நிறுத்தி வைக்கப் பெற்றிருந்தது.

கொல்லைக்கு வந்த கோகிலம், கூட வந்த பெண்களோடு, ஒரு ஒதுப்புறத்தை நாடுபவள் போல மெள்ள மெள்ளத் தெருவின் கோடிக்கு வந்து விட்டாள்.

உடனே காரும் ஸ்டார்ட் (Start) ஆயிற்று. கோகிலம் தனது உயிர்த் தோழி ஞானத்தைக் கட்டித் தழுவிக் கண்ணீர் சொரிந்தாள். தோன்றாத் துணையா யிருந்த வாத்தியாரம்மாளை நமஸ்கரித்தாள். இன்னொரு தோழியான அவ்வூர் லேடீஸ் கிளப் காரியதரிசியையும் கண்ணீர் ததும்ப வணங்கினாள். "உங்களுக்கெல்லாம் என்ன கைம்மாறு செய்யப் போகின்றேன்?" என்று மெய் சிலிர்க்க, நாத் தழுதழுக்க, அன்பின் பிரவாகம் கண்களிலே வெளிப்படக் கூறினாள்.

அப்பொழுது, காரினின்றும் ஒரு வாலிபன், கையில் ஒரு சிறு மூட்டையுடன், கீழே யிறங்கி, அம் மூட்டையை வாத்தியாரம்மாளிடம் கொடுத்து "உயிர்ப் பிச்சை கொடுத்தது போன்ற மறக்க முடியாத பேருதவி" என்று எல்லோரையும் வணங்கினான்.

வந்த பெண்களுக்கு ஒன்றும் கூறத் தோன்ற வில்லை. உணர்ச்சியின் வேகத்தினால் எல்லோர் உடம் பும் நடுநடுங்கிக் கொண்டிருந்தது.

அடுத்த நிமிஷம் கோகிலம் அவ் வாலிபனோடு காரில் ஏறினாள். கார் பறந்தது.

கூடச் சென்ற தோழிமார்கள் கண்ணீர் சொரி யப் பெருமூச்சுடன் வீடு திரும்பினர்.

ஞானமும் கோகிலமும் ஒரே வயதுப் பெண் கள் என்பது மட்டுமல்ல. இருவரும் ஒரேவிதத்

தோற்றம் பெற்றவர்கள். ஒரே உயரம், ஒரே பருமன், ஒரே நிறம், ஒரே மாதிரியான அங்க அடையாளங்கள். பேச்சும் குரலும் கூட ஒரே மாதிரி. நெருங்கிய பழக்கமில்லாதவர்கள் எளிதில் அவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியாது.

ஞானம் கோகிலத்தினிடம் முன்பு ஒரு முறை தன் நிலைமையை விளக்கிக் கூறி, உலகத்தினிடம் மகா வெறுப் பேற்பட்டவளாய்ப் பேசினாளல்லவா ? கோகிலம் அதற்குத் தகுந்த சமாதானம் கூறி வந்தாள். அதன் பின்னரே அவளுடைய விவாகம் நிச்சயமாயிற்று. அதைத் தடுக்க அவள் முயன்றாள். பலிதமடையவில்லை. அம் முயற்சியில் ஈடுபடுவது வீண் வேலையென்றும் தோன்றிற்று. ஆகவே, சமயத்தில், சூழ்ச்சியாலும், சட்டத்தின் உதவியாலுமே வெல்ல வேண்டுமென்று தீர்மானித்தாள். அவளுடைய நோக்கம் தான் குறித்த காதலனை அடையவேண்டும்; ஞானத்தின் வாழ்க்கையில் ஒரு புரட்சியை உண்டுபண்ணி அதன் மூலம் சமூக விதவைகளுக்கு ஓர் வழி திறக்க வேண்டும் என்ற இரண்டு வழிகளில் பிரவர்த்தியாகியிருந்தது. சாகத் துணிந்த ஞானத்தை எதற்கும் தயார்ப்படுத்தி விடலாம் என்பது அவள் துணிபு. ஞானம் அதற்கு இணங்கினாள். லேடீஸ் கிளப் காரியதரிசி அதற்குப் பெருந் துணை புரிந்தாள்.

* * *

கார் வாயுவேக மனோ வேகத்தில் சென்று கொண்டிருந்தது. வந்த வாலிபன் ஜெயராமன் தான்—

என்பதை நேயர்கள் யூகித்துக் கொண்டிருக்கலாம். மலாய் நாட்டிலிருந்து அவன் இங்கு வந்து சேர்ந்த விவரம் பின்னர் விவரிக்கப்படும்.

கார் சென்ற வேகத்தில், சாலையில் கடுமையான குளிர்ங்காற்று வீசிற்று. இருவருக்கும் ஒருவரோ டொருவர் வார்த்தையாட வேண்டுமென்ற ஆசை பொங்கிக் கொண்டிருந்தும், திடீரென்று ஒன்றும் பேசத் தோன்றவில்லை.

பலவகைப்பட்ட உணர்ச்சிகளினால் அவர்களு டைய இருதயம் வேகமாக அடித்துக் கொண் டிருந்தது.

சரியாக ஒரு மணிக்கெல்லாம் மோட்டார் திருச்சி வந்து சேர்ந்தது.

அங்கே ஒரு பங்களா அழகாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. மின்சார தீபங்கள் ஜகஜ் ஜோதியாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. கொடிகளும், தோர ணங்களும் வகை வகையாய் இலங்கின. அந்த நள் ளிரவிலும், ஆண்களும் பெண்களுமாக, ஏராளமான தோழர்கள் குழுமி, உரையாடிக் கொண்டிருந்தனர். எல்லோர் முகத்திலும் ஓர்வித ஆவலும் படபடப்பும் குடி கொண்டிருந்தன.

கார் மூன்று முறை ஆரன் (Horn) கொடுத்து, பங்களா காம்பௌண்டுக்குள் நுழைந்தது.

உடனே ஆங்குக் குழுமியிருந்த நண்பர்களெல்லாம் குதூகலத்துடன் வெளியில் ஓடி வந்தனர்.

“கோகிலம் வாழ்க!” “ஜெயராம் வாழ்க!” “காதல் வெல்க!” “காதல் வாழ்க!” என்ற கோஷம் வானைப் பிளந்தது.

அங்கே குழுமியிருந்த கூட்டம் மகா கண்ணியமான கூட்டமாகும். எல்லோரும் கௌரவமான பெரிய மனிதர்கள்.

நாட்டிலுள்ள சீர்திருத்தக்காரர்கள், தலைவர்கள், தொண்டர்கள் முதலிய எல்லோருக்கும் ஏற்கனவே அழைப்பு அனுப்பப்பெற்று, அவர்களனைவரும், தம்பதிகளாகவும், தனித்தனியாகவும் முன் கூட்டியே வந்திருந்து சிறப்புச் செய்தனர்.

ஜெயராமனுக்குப் பின்னால், பாதுகாப்புக்காகப், பல தொண்டர்கள் நிறைந்த சில கார்களும் அனுப்பப்பெற்று, அவர்களும் பத்திரமாக வந்து சேர்ந்தனர்.

ஒரு மணி நேரம் சந்தோஷமான ஆரவாரத்திற்குப் பிறகு, மேல் நிகழ்ச்சிகளை ஆலோசித்தனர்.

ஞானத்திற்கு ஏதேனும் அபாயம் நேரலாமாதலால், விடிவதற்குள் மாங்குடிக்குச் சரியான துணை அனுப்ப வேண்டுமென்று கோகிலம் பதறிக் கூறினாள்.

பிறகு, ஏற்கனவே முடிவு செய்திருந்தபடி, கோகில—ஜெயராமன் திருமண வைபவத்துக்குப் பூர்

வாங்கமான ஏற்பாடுகளெல்லாம் துரிதமாக நிகழ்ந்து கொண்டிருந்தன.

சரியாக மூன்று மணிக்கு உணர்ச்சி நிறைந்த ஆர்ப்பாட்டங்களோடு, எல்லோரும் ஆசி கூறத், தோழர்கள் கோகிலமும் ஜெயராமனும் மாலையொடு கணையாழி மாற்றித், தங்கள் திருமணத்தை நிறைவேற்றிக் கொண்டனர். உடனே தலைவர்கள் திருமணத்தைப்பற்றிய சில நல்லுரைகள் வழங்கினார்கள். மங்கையர்கள் மங்கள கீதம் பாடிப், புஷ்பங்களை வாரியிறைத்தனர். வந்திருந்த பிரபலஸ்தர்கள் எல்லோரும் சாட்சிப் பத்திரத்தில் கையொப்பமிட்டனர். பின்னர் ஒரு சிற்றுண்டியும் நடைபெற்றது.

கல்யாண வைபவம் முடிந்ததும், விருந்தினர்கள் அனைவரும் கூட்டம் கூட்டமாகப் பிரிந்து சம்பாஷணைகள் புரிவதும், சிறு சிறு பிரசங்கங்கள் நடத்துவமாகக் களிப்பும் மகிழ்ச்சியும் உணர்ச்சியுமே உருவமாக இருந்தனர்.

இதற்குள் ஜில்லாக் கலெக்டரிடம் சமர்ப்பிப்பதற்காகக் கோகிலத்தின் பெயரால் ஒரு ஸ்டேட்மெண்டு (Statement) தயாரிக்கப்பெற்றது. அதில் அவளுடைய வயது, சிறுபிள்ளை முதல் ஜெயராமனோடு அவள் பழகி வந்தது, ஜெயராமனுக்கே அவளை வாழ்க்கைப்படுத்துவதாய் நிச்சயித்திருந்தது, பிறகு செல்வ நிலை சீர்கேட்டினால் ஜாதி வழக்கப்படி தன்னை

இன்னொருவருக்கு மணம் பேசி ஸகல காரியங்களும் நிறைவேறிவிட்டது, அழகப்பனின் குணகுணங்கள், அவன் ஞானத்தைக் கெடுத்தது, ஞானத்தின் நிலைமை, நிர்ப்பாக்கியவதியான அந்தப் பெண்ணின் நன்மையையும் தனது நன்மையையும் கருதி அதற்காகத் தாங்கள் செய்த சூழ்ச்சி, யாருடைய கட்டாயமும் வற்புறுத்தலுமின்றி ஜெயராமனைத் தான் மணந்து கொண்டது முதலியவை அந்த ஸ்டேட்மெண்டில் விளக்கப் பெற்றிருந்தன.

அப்பொழுதே தக்க பெரிய மனிதர்களை அனுப்பி, அந்த ஸ்டேட்மெண்டைக் கலெக்டரிடம் தாக்கல் செய்து, மாங்குடிக்கு உதவி வேண்டினர்.

அப்பொழுதிருந்த கலெக்டர் ஓர் வெள்ளைக்காரர். எனினும், தமிழர்களிடம் பேரபிமானமுடையவர். சீர்திருத்தக்காரர்களென்றால் அவருக்கு நிரம்பப் பிடிக்கும். எல்லோருடனும் தாராளமாக, சினேகபாவத்தோடு பழகுவார் என்ற ஒரு நல்ல பெயரும் அவருக்கு ஏற்பட்டிருந்தது. மேலும், அந்த ஸ்டேட்மெண்டை அவரிடம் கொண்டு சென்றவர்கள் அவருக்கு நெருங்கிய நண்பர்கள். ஆகவே, அந்த அகால நேரத்திலும், எத்தகைய ஸங்கடமுமன்னியில் ஸந்தோஷத்தோடு உதவியளிப்பதாக அவர் வாக்களித்தார்.

அப்பொழுதே ஜரூரான ஏற்பாடுகளைச் செய்து, சில போலீஸ் ஆபீஸர்கள் சகிதமாகக் கலெக்டர் வர, எல்லோருமாக மாங்குடிக்குப் புறப்பட்டனர்.

கோகிலத்தைப் பயணம் பண்ணியதும், அவளு டைய தோழிமார்கள் மகா சஞ்சலத்தோடு உள்ளே சென்றார்களல்லவா!

கோகிலம் காரில் ஏறுமுன்னாடியே, ஜெயராமன் காரினின்றும் இறங்கியதும், தனது நன்றியைத் தெரி விக்கும்பொழுது, ஒரு சிறு மூட்டையை வாத்தியாரம் மாளிடம் கொடுத்தான் என்று குறிப்பிட்டிருந்தது நேயர்களுக்கு நினைவிலிருக்கலாம். அந்தச் சிறிய மூட் டையில், முன் கூட்டியே ஏற்பாடு செய்திருந்த வண் ணம், கோகிலம் அப்பொழுது அணிந்திருந்த ஆடை மாதிரியும், அணிகலன்கள் போலவும், இன்னொரு ''ஸெட்'' ஆடைஆபரணங்கள் வைக்கப்பெற்றிருந்தன. கார் நின்றிருந்ததற்கு எதிர்வீடுதான் "லேடீஸ் கிளப்" கட்டிடமாகும். அக்கட்டிடத்தில் இரவு நேரத்தில் ஒரே யொரு வேலைக்காரக் கிழவி மட்டுந்தான் இருப்பது வழக் கம். அன்று தினம் லேடீஸ் கிளப் காரியதரிசி அக்கிழ வியைத் தன் வீட்டில் காவலுக்காகப் போய்ப் படுத்துக் கொள்ளுமாறு கூறி அனுப்பிவிட்டு, முன்னெச்சரிக்கை யோடு'கிளப்' சாவியைத் தான் வாங்கி வைத்திருந்தாள். பிறகு கோகிலாம்பாள் காரில் சென்றதும், மற்றமூன்று பெண்மணிகளும் 'லேடீஸ் கிளப்'பைத் திறந்து, கதவை உட்புறம் தாளிட்டுக்கொண்டு, உள்ளே சென்றனர். அதன் காரியதரிசி மங்கலாக எரிந்துகொண்டிருந்த விளக்கைத் தூண்டவும், ஞானம்பாள் தனது, வெள்ளை உடையைக் களைந்து, மணப்பெண்ணின் ஆடை ஆபர ணங்களை அணிந்து கொண்டாள். பிறகு மூவருமாக

அங்கிருந்து வெளிப்பட்டுக் கல்யாணக் கிரகத்தில் நுழைந்தனர்.

அந்தி நேரத்திலேயே அடங்கிப் போகின்ற அந்தச் சிற்றூரில் நடுநிசி நேரத்தில் "யாரும் கண்டு விடுவாரோ?" என்ற அச்சம் சிறிது மின்றியே அப்பெண் மணிகள் தங்கள் கருமத்தை யாற்றினர். அவர்கள் நினைத்தபடியே ஒருவராவது அவர்களைக் கவனிக்க வில்லை. மேல் நோக்காகப் பார்க்குப் பொழுது ஞானத்திற்கும் கோகிலத்திற்கும் (நெருங்கிப் பழகியவர்கள் கூட) வித்தியாசம்கண்டுகொள்ள முடியாத நிலைமையில் தத்ரூபம் கோகிலத்தைப்போலவே சிங்காரித்து வந்திருக்கும் ஞானத்தை அந்த நடு இரவில் ஒருவரும் தெரிந்துகொள்ளவில்லை என்று கூறுவதில் வியப்பொன்றும் இல்லை.

கல்யாண வீட்டுக்குள் நுழைந்ததும், ஞானம் கோகிலத்தின் படுக்கையில் நிறையப் போர்த்திக் கொண்டு படுத்துவிட்டாள். மற்ற இருவரும் தங்கள் படுக்கைகளைப் போட்டுக் கொண்டனர்.

ஞானம் வெளிப்பார்வைக்குத் தைரியமாக இருப்பவள் போல் தோன்றினாலும், உள்ளுக்குள் அவளுக்கு அடங்காத திகில் ஏற்பட்டிருந்தது. போர்வையால் அவள் இழுத்துப் போர்த்தியும், அவளால் சிறிதும் கண்ணயர முடியவில்லை.

இன்னும் சிலமணி நேரங்களுக்குள் தனக்கு எத்தகைய பெரிய துன்பங்கள் நேரிடுமோ, என்ற ஏக்கம்

மலைபோலத் தோன்றி அவளை உலப்பத் தொடங்கிற்று. துரதிர்ஷ்ட வசமாக ஆரம்பத்திலேயே தங்களுடைய சூழ்ச்சி வெளிப்பட்டுப் போகுமானால் தன்னுடைய கதி என்னவாகும், என்பதை நினைக்கும்போது அவளுடைய தேகம் கிடு கிடுவென்று நடுங்கிற்று. இத்தனை ஜனக் கூட்டத்தின் மத்தியில் உண்மையான மணப்பெண்ணைப் போலத் தான் நடித்துவிடக்கூடும் என்ற நம்பிக்கை அவளுக்கு உண்டாகவில்லை. தனது நெருங்கிய பந்துக் களான பல உறவினர்களின் எதிரில் இத்தகைய கபட நாடகம் எவ்வளவு பெரிய மானக்கேட்டையும் இழி வையும் உண்டு பண்ணுமோ, அதனால் அந்த நிமிஷத் திலேயே என்ன தீங்கு நேரிடுமோ, என்ற திகில் அவள் மனதில் அபாரமாகப் புகுந்து கொண்டது. உடல் சிலிர் சிலிர்த்து, வியர்வைத் துளிகள் உண்டாயின. தனது குல தெய்வங்களையெல்லாம் மனமாரப் பிரார்த் தித்தாள். சமயத்தில் தக்க தைரியத்தையும் மனத் துணிவையும் உண்டுபண்ண வேண்டுமென்று எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக்கொண்டாள். நிமிஷத் திற்கு நிமிஷம், அவளுடைய பயமும், கவலையும், துன் பமும், ஏக்கமும் ஒன்று, பத்து, நூறுமடங்காகப் பெருகி, அவளுடம்பை அணுவணுவாகத் துளைத்துக் கொண்டிருந்தன. சகல பாரத்தையும் தேவியின் பேரில் போட்டு, தனது மடியில் பத்திரப்படுத்திவைத்தி ருந்தசில கடிதங்கள் பத்திரமாயிருக்கின்றனவா, என்று அடிக்கடி அவற்றைத் தொட்டுப் பார்த்துக்கொண்டு, எந்த நிமிஷம் என்ன ஏற்படுமோவெனப் பெருங் கவ

வாத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

இவ்வாறு சிறிது நேரம் கழிய, சில வயோதிக ஸ்திரீகள் எழுந்து, "திருப்பூட்ட நேரமாய் விட்டதடி, பெண்டுகளா! பெண்ணை சிங்காரியுங்கள்!" என்று தூங்கிக்கொண்டிருந்த வாலிபப் பெண்களை யெழுப்பினர். உடனே 'லேடீஸ்கிளப்' காரியதரிசிப் பெண்ணும் வாத்தியாரம்மாளும் எழுந்து, ஞானத்தை எழுப்பி அவளுக்கு அணிபூட்டி அலங்காரம் செய்ய ஆரம்பித்தனர்.

அதிர்ஷ்ட வசத்தினாலும், அலங்காரச் சிறப்பினாலும், ஞானத்தின் துணிகரமான ஸாகஸம் பொருந்திய நடிப்புத் திறமையினாலும், எத்தகைய அசம்பாவிதமுமின்றி அந்த இரவு முக்கியமான சடங்குகளெல்லாம் நிறைவேறிப் போய் விட்டன. பிறகு மணவறைச் சடங்குகள் முடியும் தருணத்தில், அரசாணிக்கால் சுற்றி வந்த சமயம், 3-ம் அத்யாய இறுதியில் விவரித்தபடி, திடீரென்று பெருங்குழப்பம் ஏற்பட்டுவிட்டது.

மணப்பெண் கோகிலத்தின் ஸ்தானத்திலே இன்னொரு நங்கை நின்று கொண்டிருந்ததைக் கண்டதும், கோகிலத்தின் தந்தை கந்தசாமி செட்டியார் மகா கோபவேசத்தோடு ஒரு கழியை எடுத்துக் கொண்டு அந்தப் போலி மணப்பெண்ணின் பேரில் பாய்ந்தார், என்று முன்னேறிடத்தில் கூறினோமல்லவா?

அவ்வாறு மகா மூர்க்கத்தனத்தோடு அந்த இளநங்கையை அவர் தாக்க முற்பட்டபொழுது, அவர்

அருகில் நின்று கொண்டிருந்த அவ்வூர் வாலிப சங்கக் காரியதரிசி, இரக்கமேலீட்டால், அவரைத் தடை செய்து, அப்பால் இழுத்துக்கொண்டு போய் விட்டார். கல்யாண மண்டபம் முழுதும் ஏக அமர்க்களமாகிவிட்டது. அதற்குள், சில பெண்கள் “அவள் ஞானமல்லவா? தேனூர் விதவை ஞானமன்றோ, அவள்!” என்று கூவினர்.

“அடி, முண்டை!; விதவைக் கைம்பெண்டாட்டிக்கு என்ன ஆணவம்!; என்ன துணிவு!; எவ்வளவு ஸாகஸம்!; நல்ல பணக்கார மாப்பிள்ளையாகப் பார்த்து மணையிலே உட்கார்ந்து விட்டாளே, கைகாரி! கல்யாணப் பெண்ணை என்ன செய்தாளோ, நீலி!” என்றெல்லாம் அவர்கள் பேசினர்.

உடனே இருதரப்புப் பங்காளிகளும் மேலே என்ன செய்வதென்பதை ஆலோசித்தனர்.

போலீசுக்கு ஆளனுப்ப வேண்டுமென்று சிலர் கூறினர். பெண்ணுக்கு அலங்காரம் செய்த வாத்தியாரம்மாளைப் பிடித்துக் கட்டுங்கள், என்றனர் சிலர். கோகிலத்தைத் தேட நாலா பக்கமும் ஆளனுப்ப வேண்டுமென்று பலரும் கூறினர்.

இதற்குள், சில பெண்கள் ஞானத்தை அணுகி, அவளைப் பலவிதமாக அவமானப் படுத்தவும், வசைமொழிகள் பாடவும், புரளி செய்யவும் ஆரம்பித்து விட்டனர்.

ஒரு பெண்:-அவளும் பால்யத்தில் விதவையான வளே. இப்பொழுது கொஞ்சம் வயசானவள். வேடிக்கையாகவும், பச்சை பச்சையாகவும் பேசுவதில் அவளுக்கு ரொம்பத் திருப்தி. அவள் ஞானம்பாளை நோக்கி, "என்ன ஞானம்பா! இரண்டாந்தாமும் கல்யாணப் பொண்ணாய் மணையிலே உட்கார ஆசை உண்டாச்சுதாக்கும்! வாத்தியாரம்மாள்தான் தரகாக்கும்! அடி, வைத்தியக்காரி! என்னிடம் சொல்லியிருக்கப்படாதா? எங்கள் வீட்டிலே "யிருக்க" வல மூக்கன் ஆயிசு முழுதும் பெண்டாட்டி கிடைக்காமல் தவிக்கிறானே. அவனை ஒரு சுயமரியாதைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா, "ஜாம் ஜாம்ணு" கொம்மாளம் கொட்டலாமே! இப்பிடியெல்லாம் வந்து ஏன் இந்த இக்கட்டில் மாட்டிக்கவேணும்?--போகட்டும்; அதற்காகக் கோகிலத்தை என்ன செய்தாய்? என்னிடம் மட்டும் கூறிவிடு!" என்று ஞானத்தின் சடையைப் பிடித்து வெடுக்கெனப் பின்புறமாக இழுத்தாள்.

இன்னொருத்தி, இன்னும் ஆத்திரம் தணியாதவளாய், "கோகிலத்தை என்னடி செய்தாய், கொலைகாரி? எத்தனையோ தடியன்களெல்லாம் இருக்க, எல்லாவற்றையும் உதிர்த்து விட்டு, இப்படி மணையிலே வந்து உட்கார்ந்து விட்டாயேடி, பட்டி முண்டை; என்ன துணிச்சலடி?" என்று ஞானத்தின் முகத்திலே ஓங்கி ஓர் இடி இடித்தாள்.

மற்றொருபெண், அவள் புருஷன் கொட்டாப்புளி மாதிரி வீட்டிலேயிருக்க, அயல் வீட்டுப் புருஷர்களை

ரகசியமாய்ச் சந்திப்பதில் அவள் பலே கைகாரி. அவள் மற்ற பெண்களை நோக்கி குசுகுசு வென்று, ஆனால் ஞானத்தின் செவியிலே விழுமாறு, "அவள் வயிற்றைப் பாருங்களடி! எவ்வளவு பெருசாயிருக்கு! பிள்ளைக்கு விதையும் ஏற்கனவே போட்டாச்சுப் போயிருக்கு! அதுதான் இவ்வளவு தைரியமாய் மணையிலே வந்து உட்கார்ந்து விட்டாள்" என்றாள். உடனே எல்லாப் பெண்களும் 'கொல்'லென்று நகைத்தனர்.

"அடி அவிசாரித் தேவடியாள்! அதற்குள் வயிற்றிலும் வந்து விட்டதா? நல்ல குடும்பத்துக்கு நாசகாரியாய்த் தோன்றினளே, பாவி!" என்று மற்ற பெண்களும் ஏகமாய்க் கூக்குரலிட்டனர்.

இந்த நிலையில், ஞானத்தின் பாடு பெரிதும் பரிதாபகரமானதாகவும், மிகுந்த அபாயத்திற்குட்பட்டதாகவும் ஆகிவிட்டது. அச்சத்தினால் அவளுடைய இருதயம் படபடவென்று துடித்துக் கொண்டிருந்தது. இனித், தான் உயிர் தப்புவதே பிரயாசை என்று தீர்மானித்து விட்டாள். அத்தனை ஜனங்களும் மிக ஆத்திரத்தோடு கொடிய புலிகள் போலவும், பேய்பிசாசுகள் போலவும் தன்னைப் பிய்த்துப், பிராண்டித் தின்று விடுபவர்கள் போலக் கண்களிலே நெருப்புப்பொறி பறக்க எதிரில் நின்றுகொண்டிருந்ததைக் கண்டதும், அவள் தேகம் நடுநடுங்கி, மிகவும் குன்றிப்போய் விட்டது. எவ்வளவு மனத்துணிவோடு தான் பேசினாலும், தனது விவாகம் ஒப்புக்கொள்ளப் பெறாது என்பது

அவளுக்குத் தோன்றிவிட்டது. தன்பேரில் இரக்கம் காட்டி அனுதாபத்துடன் தனது கட்சியை எடுத்துப் பேசக்கூடியவர்கள் அங்கு யாருமில்லை என்பதும் அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. தான் எதுவும் சொல்வதை விட ஒன்றும் பேசாமலிருப்பதே நலம் என்று தீர்மானித்தாள். நிமிஷத்துக்கு நிமிஷம் பயமும், திகிலும், மனோ வேதனையும் அதிகரிக்க, அவள் கண்களினின்றும் நீர் ஆறாகப் பெருக்கெடுத்தோடிற்று.

"நீலி! கண்ணீர் வடிக்கிறாள், பாருங்களடி!" என்றனர் சில பெண்மணிகள்.

"இவ்வளவு பெரிய நாடகத்தை இத்தனை சாமார்த்தியமாய் நடித்தவளுக்குக் கண்ணீர் விடுவது ஒரு பிரமாதமா!" என்றனர் மற்றும் சிலர்.

இவ்வாறு பலரும் ஞானத்தைச் சுற்றிக் கும்பல் கூடி நின்று உயிரோடு அவளை வதைத்துக் கொண்டிருக்கையில், மாப்பிள்ளையின் தகப்பனார் மகா கோபாவேசமுடையவராய்த் திடீரென்று மணப் பெண்ணிடம் சென்று, அவள் கூந்தலைப் பரபரவென்று பற்றியிழுத்து, நடுவாசலுக்குக் கொண்டுவந்து "அடி, பஜாரி! எங்கே நீலித்தனம்!" என்று தன் பலங்கொண்ட மட்டும் எட்டி ஓர் உதை உதைத்தார்.

அந்தோ; பரிதாபம்! அம் மூர்க்கனுடைய மிருகத்தனமான உதையைத் தாங்கவல்லதா அப்பைங்கிளிர் மேனி! 'ஐயோ' என்றாள். அந்த நிமிடமே மூர்ச்சை

யாகித், தடாரென்று பூமியில் விழுந்தாள் அப் பூங் கோதை.

“ஐயோ, பாவம்; செத்துவிட்டாள்” என்றனர் சிலர். “கள்ளி, ஜாலக் பண்ணுகிறாள்” என்றனர் வேறு சிலர். “தொந்தரவு செய்யாமல் விசாரியுங்கள்” என்றனர் மற்றும் சிலர்.

“ஐயோ; ஞானத்தின் தாயும் கேணிக்குள் விழுந்து விட்டாள்” என்ற கூக்குரல் வேறு இதற்கிடையில் கிளம்பிற்று. “ஏதடா, சனியன்!” என்று கேணியை நோக்கிப் பலர் ஓடினர்.

இப்படியாக, மணக்கோலங் கொண்ட அந்த வீடு பிணக்கோலங்களையும் கண்டுவிடுமோ, என்ற நிலையில் வசவும், திட்டும், பரிதாபமும், திகிலும், ஆத்திரமும் கோபமுங் கொண்ட பலவகை மக்களால் நிர்த்தூளி பட்டுக் கொண்டிருந்தது.

மணமகன் பயமும், திகிலும், ஏமாற்றமும், வெட்கமும், சினமும் ஒருங்கேயடைந்து, தன்னந்தனியனாய் நடுங்கிக் கொண்டிருந்தான்.

வாத்தியாரம்மாளைச் சிலர் தேடினர். அந்நேரம் வரைக்குமா அவள் தாமதித்திருப்பாள்! லேடீஸ் கிளப் காரியதரிசியைச் சிலர் விசாரித்தனர். “தூக்க வெறியில் நான் சரியாகக் கவனிக்கவில்லை” என்று அவள் மழுப்பி விட்டாள்.

கோகிலம் போன துப்பு ஒருவருக்கும் தெரிய வில்லை. அவளைத் தேடுவதற்கு நாலாபக்கமும் ஆள் அனுப்பியாய்விட்டது. போலீசுக்கும் அப்பொழுதே தகவல் தெரிவிக்கப்பெற்று, சில ஜவான்கள் சகிதம் ஸப்-இன்ஸ்பெக்டர் வந்து தம் அமுலைநடத்தத்தொடங்கி விட்டார்.

பச்சாத்தாபமுள்ள சிலர் ஞானத்தை மூர்ச்சை தெளியவைத்துக் கொண்டிருந்தனர். கேணியில் வீழ்ந்த ஞானத்தின் தாயாரையும் உடனே வெளியில் தூக்கி அவளுக்கு வேண்டிய சைத்யோபசாரங்களும் நடந்து கொண்டிருக்கின்றன.

*　　　*　　　*

இந்த நிலைமையில் காலை 6 மணி ஆயிற்று. கல்யாண வீட்டின் முகப்பில் 5, 6 கார்கள் வந்து நின்றன. ஜில்லா கலெக்டர் முதலியவர்களோடு, மணக் கோலம் பூண்டவர்களாய், ஜெயராமனும் கோகிலமும் கார்களி னின்றும்இறங்கி, உள்ளே நுழைந்தனர். வீட்டுக்குள்ளே பரபரப்பாக இருந்த ஜனங்கள் புதிதாக 5, 6 கார்கள் வந்து நிற்கவே, எல்லோரும் வெளியில் ஓடி வந்த னர். வந்தவர்கள் மணக் கோலத்தோடு நின்ற கோகிலத்தைக் கண்டதும், "கோகிலம் வந்து விட்டாள்! கோகிலம் வந்து விட்டாள்!" என்று ஏக ஆரவாரம் செய்தனர்.

ஆங்காங்கு அலுத்துப்போய் நின்றவர்களும், பீதி கொண்டு நின்றவர்களும், கோகிலத்தையும் அவளுடைய கோலத்தையும் கண்டதும் பேராச்சரியமடைந்தனர்.

கோகிலமும் ஜெயராமனும் உள்ளே சென்றதும், முதன் முதலில், கோலத்தின் கல்யாணத்துக்காக வந்திருந்த ஜெயராமனின் தாயார் காலில் விழுந்து வணங்கிப், பிறகு கோகிலத்தின் பெற்றோர்களையும் நமஸ்கரித்தனர். அப்பொழுது கோகிலம், "அத்தானையே மணந்து கொண்டேன்" என்று குயில்போல அவர்களிடம் மொழிந்தாள். கோகிலத்தைக் கண்டவுடனே அவளுடைய பெற்றோர்கள் அடங்கா மகிழ்ச்சியடைந்தனர். ஆயினும் அவளுடைய கோலத்தையும் ஜெயராமனையும் கண்டதும் அவர்களுக்குத் தாங்க முடியாத அவமானமும் கோபமும் உண்டாயின.

ஞானம் எங்கேயென்று கோகிலம் நாற்புறமும் மருண்டு, மருண்டு நோக்கினாள். இன்னும் சரியான பிரக்ஞை வராமல் ஞானம் சோர்ந்து, சுருண்டு ஓர்புறம் கிடந்த காட்சி அவளுக்குத் தோன்றிற்று. உடனே 'ஞானம்!' என்று கதறிக்கொண்டே கோகிலம் தன்னை மறந்து அவ்விடத்தை அணுகினாள்.

இதற்குள் அங்கே சிறிது நேரம் முந்தி வந்திருந்த ஸப்-இன்ஸ்பெக்டர் கலெக்டர் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களைக் கண்டதும் பெரிதும் வியப்பெய்தி, தாம் வந்தது முதல் விசாரித்தறிந்த ஸகல விஷயங்களையும் அவர்களிடம் விரிவாய்க் கூறினார்.

கல்யாண வீட்டில் பல போலீஸ் ஜவான்களையும், பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களையும் கண்டதும் ஜனங்களெல்லாம் விலவிலத்து நடு, நடுங்கி மூச்சுக்கூட

விடப் பயந்தவர்களாய் நின்று கொண்டிருந்தனர். மன தினுலுங் கூட நினைக்க முடியாத அன்று நடந்த சம்ப வங்கள் அவர்களைக் கல்லாய்ச் சமைத்து விட்டன. கோகிலம் காணுமற் போனதும், திடீரென அவள் இன்னொரு மாப்பிள்ளையுடன் மணக் கோலத்தோடு தோன்றியதும், அவர்களை யொட்டிப் பல பெரிய மனிதர்கள் வந்திருந்ததும், ஞானம் பட்டாடை யுடுத்தி, மணக் கோலம் பூண்டதும் அவர்களை ஸ்தம்பிக்கச் செய்து விட்டன. எல்லோரும் ஞானத்தின் நிலைமையில் கவலை கொண்டு, மேலே என்ன நிகழப் போகிறது என்பதை ஆவலோடு நோக்கிக் கொண்டிருந்தனர்.

மணமகனின் தந்தை தான் உதைத்த உதையினுல் ஞானம் இன்னும் எழுந்திராமல் கிடப்பதைக்கண்டதும், அதனுல்தனக்கு என்ன ஆபத்து நேரிடுமோ என்றஅச்ச முடையவராய்ப்,பெருந்திகில் கொண்டு ஒன்றும் பேசா மல் நின்று கொண்டிருந்தார்.

கோகிலத்தின் குரலைக் கேட்டதும் ஞானம் கண் விழித்தாள். உடனே அவளுடைய முகத்தை மறுபடி யும் ஈரத் துணி கொண்டு துவட்டி லேசாக விசிறினர். கோகிலம் அவளைத் தழுவித் தூக்கித் தனது மார்பின் மீது சார்த்திக் கொண்டாள். சிறிது நேரத்திற்கெல் லாம் ஞானத்துக்கு ஒழுங்கான பிரக்ஞை வரத் தொடங்கி, தெளிவு உண்டாயிற்று. கோகிலம் அவளு டைய முகத்தோடு முகம் வைத்துக்கொண்டு, "ஆ சகோதரி! என்னுலல்லவா உனக்கு இத்தகைய துன் பங்கள்!" என்று கண்களிலே தாரை தாரையாய் நீர்

வடிய, நாக்குளறிக் கொண்டு கூறினாள். "அப்படி நினையாதே, கோகிலா! என் தலை விதியை நான் அனுபவிக்கின்றேன்!" என்றாள் ஞானம். அவள் கண்களிலும் நீர் சொட்டிற்று. இதைக் கண்டதும் சுற்றி நின்ற ஜனங்களெல்லாம் கண்ணீர் விட்டனர்.

ஜெயராமனைக் கண்டதும் அவனுடைய தாய் வியப்பேவடிவானவளாய் "ஆ! மகனே! இதென்னடா, கோலம்?" என்று அவனைக் கட்டிக் கொண்டழுதாள்.

அப்பொழுது அழகப்பனின் தந்தை, அருகில் நின்று கொண்டிருந்தவர், ஜெயராமனை நோக்கி, "அயோக்கியப் பயலே! திருட்டு நாயே! எங்களை அவமானப்படுத்தவா தோன்றினாய்!" என்று மேலே இன்னும் ஏதோ பேச வாயெடுத்தார். அப்பொழுது கலெக்டர் முதலியவர்கள் அந்தப் பக்கமாக வரவே, அச்சத்தோடு தன் கோபாவேசத்தை அடக்கிக் கொண்டார்.

ஞானம் இருந்த இடம் நோக்கி உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் வந்தனர். கோகிலம் ஞானத்துக்குக் கலெக்டரை அறிமுகப்படுத்தி அவரிடம் சகல விருத்தாந்தங்களையும் கூறுமாறு வேண்டிக் கொண்டாள்.

அவ்வாறே ஞானம், கோகிலம் கொடுத்திருந்த வாக்குமூலத்தின்படி, தனது சகல விருத்தாந்தங்களையும் ஆதியோடந்தமாகக் கூறித், தனது மடியிலிருந்த

(அழகப்பனும் தானும் சல்லாபமாயிருந்த பொழுது எடுத்த) புகைப்படங்களையும், அழகப்பன் எழுதியிருந்த சில காதற் கடிதங்களையும் காட்டினாள்.

அதைக் கேட்டு எல்லா ஜனங்களும் அப்படியே ஸ்தம்பித்து, ஆச்சரியமே வடிவாக நின்றனர். கலெக்டர் அழகப்பனை நோக்கி 'அவள் சொன்னதெல்லாம் உண்மை தானா?'' என்றார். அவன் நடுங்கிக் கொண்டே 'ஆம்' என்றான்.

பாவம்! அவன் தந்தையின் விழிகளை அப்பொழுது அவன் பார்த்திருந்தானானால் -- ?

*   *   *

சிறிது நேரம் ஆயிற்று. முடிவு என்ன ஆகுமோ, என்று எல்லா ஜனங்களும் இன்னும் பீதியுடனே கவனித்துக் கொண்டிருந்தனர்.

''ஒரு கர்ப்ப ஸ்திரீயை பிராணபயம் உண்டாகும் படியாக மூர்க்கத்தனமாய் உதைத்து மூர்ச்சையாக்கியது''

''ஒரு விதவைப் பெண்ணை வஞ்சித்து அவளைக் கெடுத்தது''

''பிராயம் வந்த ஒரு பெண்ணை அவளுடைய விருப்பத்துக்கு மாறாகக் கட்டாய மணம் புரிய முற்பட்டது''

"மேற்படி காரியங்களுக்கெல்லாம் உடந்தையாக இருந்தது"

—என்ற குற்றங்களுக்காகச் சம்பந்தப்பட்டவர்கள் பேரிலெல்லாம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் போவதாகக் கலெக்டர் கூறினார்.

ஏற்கனவே பீதியடைந்திருந்த ஜனங்களுக்கு இது அபரிமிதமான திகிலை உண்டு பண்ணி விட்டது. அப்பொழுதே தங்களைக் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப் போவதாக, மனதிற்குள் எண்ணிக் கலங்கிப் போய் விட்டனர். ஒன்றிலுமே சம்பந்தப்படாமல், வேடிக்கை பார்ப்பதற்காக வந்த சிலர் தாங்கள் மேலும் அங்கு நிற்பது ஆபத்து எனக் கருதி மெதுவாக நழுவ ஆரம்பித்தனர். வீட்டின் வாயில்களில் இருபுறமும் ஜவான்கள் நின்று கொண்டு, ஒருவரையும் வெளியே போகவும் உள்ளே வரவும் அனுமதிக்காமல் தடை செய்து கொண்டிருப்பதைக் கண்டதும், அவர்கள் பெருங்கலக்க மெய்தித், தெய்வமே கதியென ஒன்றுந் தோன்றாதவர்களாய் நின்று விட்டனர்.

இதற்கிடையில், கோகிலத்தோடு வந்திருந்த மனிதர்கள் முக்கியமானவர்களைக் கலந்து தாங்கள் சொல்லுகிறபடி நடந்து கொண்டால் எல்லாம் சந்தோஷமாக முடியுமென்று கூறினர்.

தாங்கள் தலை தப்பித்தாற் போதுமென்ற கருத்தே ஒவ்வொருவருக்கும் மேலோங்கி நின்றதால், அவர்கள்

என்ன சொன்னாலும் அதன்படி நடக்கச் சித்தமாயிருப்பதாக உறுதி கூறினர்.

பிறகு எல்லோருமாக ஆலோசித்துக் கீழ்க்கண்ட முடிவைச் செய்தனர் :-

"தான் பல நாள் விரும்பிக் காதலித்திருந்த ஜெயராமனைக் கோகிலம் சுயேச்சையாக மணம் புரிந்து கொண்டதைச் சந்தோஷமாக எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்."

"ஞானத்தையே அழகப்பன் மனைவியாக ஏற்றுக் கொள்ளச் சம்மதிப்பதாலும், தெய்வாதீனமாக அவளே மணமகளாகக் கருதப்பட்டு, முக்கியமான சடங்குகளெல்லாம் நிறைவேறிவிட்டன வாதலாலும், அந்த மணத்தை ஊர்ஜிதப்படுத்தி ஞானம்பாளை மணமகளாக ஏற்றுக்கொள்வதோடு, அழகப்பனின் பெற்றோர்கள் தங்கள் குமாரனுற் சீர்குலைக்கப்பெற்ற ஞானத்தைக் கௌரவமுள்ள மருமகளாகப் பாவிக்க வேண்டும்."

இந்த முடிவை மற்றவர்களும் திருப்தியோடு அங்கீகரித்தனர்.

கந்தசாமி செட்டியாருக்குத் தமது குமாரத்தியின் எண்ணம் பூர்த்தியாயிற்று என்ற அளவில் முன்னர்கொண்டிருந்த கோபம் நீங்கி, உள்ளுக்குள் மகிழ்ச்சி யேற்பட்டது.

அழகப்பனின் பெற்றோர்களுக்கு மட்டும் எல்லோருமாகக் கூடிச் செய்த முடிவு பெருத்த அவ

மானமாகத் தோன்றிற்று. தங்கள் மகனுக்குக், கர்ப்பந் தரித்திருக்கிற ஒரு விதவைப் பெண்ணையா கல்யாண மண்டபத்தில், மேளதாளத்தோடு, மணமகளாக ஏற்றுக் கொள்வது?, என்பதை நினைக்கும்பொழுது அவர்க ளால் ஸகிக்க முடியவில்லை. என்ன வந்தாலும் சரி; தங்களுடைய செல்வமே அடியோடு போனாலும் சரி தான்; கடைசி வரையில் ஒரு கை பார்த்து விடுவது; தங்களுக்கு மானக்கேட்டை உண்டுபண்ணிய இச்சம் பவங்களுக்குச் சரியான முறையில் பரிகாரம் தேடிக் கொண்டு விடுவது, என்று தீர்மானித்து அந்த முடி வுக்கு இணங்காமல் ஒரே மூர்க்கத்தனமாக நின் றனர்.

அவர்களின் பிடிவாதத்தைக் கண்டு அவர்களு டைய பங்காளிகளில் வாய்த்துடுக்கான சிலர் அவர் களைத் தனிமையில் அழைத்து, இவ்வாறு பிடிவாதம் செய்வது மகா முட்டாள்த்தன மென்றும், சட்டமும் சாட்சியங்களும் நேர் விரோதமாயிருக்கையில் முடிவை ஏற்றுக்கொள்வது தான் புத்திசாலித்தன மென் றும், மேஜராயிருக்கிற அழகப்பனே ஞானம்பாளை மனைவியாக ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கும் பொழுது "நாம்" ஆட்சேபிப்பதற்கில்லை யென்றும், கர்ப்பவதி யான ஞானத்தைக் கொடுமையாக உதைத்ததற்கே பெருந் தண்டனைக்காளாகும்படி நேரிடும் என்றும், ஞானம் கூறியதை யெல்லாம் கட்டுக் கதை யென்று மறுப்பதற்கும் தக்க சாட்சியமில்லை யென்றும், விதவா விவாகத்தை எல்லோரும் வரவேற்கிற இக் காலத்

தில் "நமது குலத்தில் முதலாவதாக நடந்த பெருமை நமக்கிருக்கட்டு"மென்றும் விரிவாகக் கூறினர்.

அழகப்பனின் பெற்றோர்களுக்கு வேறு வழி தோன்றவில்லை. வேண்டா வெறுப்பாக இறுதியில் அவர்களும் சம்மதித்தனர்.

பின்னர் எல்லோருமாகக் கலெக்டர் முதலியவர்களிடம் தங்கள் முடிவைத் தெரிவித்து அதை ஏற்றுக்கொள்ளுமாறு அவர்களையும் வேண்டிக் கொண்டனர்.

"உங்களுக்குள்ளே இத்தகைய சந்தோஷமான முடிவு ஏற்படுவதாயிருந்தால், நாங்கள் யாரையும் தொந்தரவுக்குள்ளாக்குவதில்லை" என்று அந்த உத்தியோகஸ்தர்கள் வாக்களித்தார்கள்.

இவ்வாறு ஏற்பட்ட முடிவைக் கண்டதும் ஜனங்களெல்லாரும் "இப்படியும் நடக்குமா ?" என்று பிரமித்துப் போயினர். 'என்ன தொந்தரவு ஏற்படுமோ?' என்று பயந்து நடு நடுங்கிக் கொண்டிருந்தவர்களெல்லாரும் இம் முடிவு தெரிந்து தங்கள் மெய் சிலிர்க்க இரட்டிப்புச் சந்தோஷத்தில் மூழ்கினர்.

அந்தக் கல்யாண மண்டபத்திலேயே இரண்டு தம்பதிகளையும் வைத்து ஒரு பெரிய "டீ பார்ட்டி" (Tea Party) நடத்த வேண்டுமென்றும், அன்றிரவு ஒரு பெரிய ஊர்வலம் வைக்க வேண்டுமென்றும், எல்லோரும் ஏகமனதாய்த் தீர்மானித்தனர்.

வந்திருந்த உத்தியோகஸ்தர்களும், சமூகத் தலைவர்கள் முதலிய பிரபலஸ்தர்களும் அந்த வைபவங்களுக்கு நிற்பதாய் வாக்களித்தனர்.

* * *

நாட்டிலே இதுவரை நடக்காத வைபவங்களை அன்று மாங்குடியிலே மக்கள் கண்டனர். ஞானமும் கோகிலமும் ஒரே அச்சில் வார்த்தெடுக்கப்பட்டவர்கள் போன்று தேவரம்பைகளென ஜெகஜ் ஜோதியாய் விளங்கினர். இருவருடைய மனோரதமும் ஈடேறியபடியால் அவர்கள் இதயத்திற் பொங்கியெழுந்த மகிழ்ச்சி கண்களின் வழியாய் முகத்திலே பிரகாசித்துக் கொண்டிருந்தது. இருவரும் அழகிய, ஆடைகள் புனைந்து, விலையுயர்ந்த அணிகள் பூண்டு யார் அழகி என்பதை ஒருவரும் மதிக்க முடியாதவாறு ஒப்புயர்வில்லாத தேவ கன்னிகைகளாகத் தோன்றி, எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டனர்.

அன்று நடந்த விருந்து முதல்தரமானதாக இருந்தது. நாவிற்கு ஏற்பட்டிருந்த அறுசுவை உண்டியோடு மனதிற்கும் மகிழ்ச்சி, ஆனந்தம், உத்சாகம், பிரமிப்பு, உணர்ச்சி, ஆர்வம் என்ற பல்வகை இன்பங்களும் கலந்திருந்தன.

அன்றிரவு நடந்த ஊர்வலத்தைப் போல எங்கும் எப்பொழுதும் கண்டதில்லை யென்று எல்லோரும்

பேசிக்கொண்டனர். அவ்வளவு மகத்தான ஏற்பாடுகள்! பிரபலமான நாதஸ்வரக் கச்சேரிகள், நாட்டியக் கச்சேரிகள், பாண்டு வாத்தியங்கள், வாண வேடிக்கைகள் முதலியவை எல்லாம் அந்த ஊர்வலத்தில் நிறைந்திருந்தன. ஊர்வலத்துக்குப் பல்லக்கு ஜோடிப்பதற்கு மட்டும் இரண்டு "லாரிகள்" நிறையப் புஷ்பங்கள் வந்தனவாம்!

புராணக்காரர்கள் கூறுவது போல மகா விஷ்ணுவும் இலக்குமி தேவியும் போலவும், கிருஷ்ணனும் ராதையும் போலவும், கந்தனும் வள்ளியும் போலவும், மதனும் ரதியும் போலவும், ஜெயராமனும்-கோகிலமும், அழகப்பனும்-ஞானம்பாளும் பல்லக்குகளில் எழுந்தருளி நாட்டியப் பெண்கள் வெண்சாமரை வீசவும், மங்கலப் பெண்கள் ஆலத்தி சுற்றவும், வாத்தியக்காரர்கள் இன்னிசை முழங்கித், தேவதுந்துமியும் சங்கநாதமும் ஒலிக்கவும், சுமங்கிலியப் பெண்கள் மாடிகளினின்றும் புஷ்பங்களை வாரியிறைக்கவும், ஆயிரக்கணக்கான தீபங்கள் சுடர் விட்டொளிரும் நட்சத்திரங்களைப்போற் பிரகாசிக்கவும், தேவகணங்கள் போன்று பதினாயிரக்கணக்கான ஜனங்கள் பின் தொடரவும் ஊரை வலமாக வந்தனர்.

எங்கும் காணாத இத்தகைய சகல சிறப்புகளோடும் செட்டிநாடு முழுதும் உணர்ச்சிப் பிரவாகத்தைப் பெருக்கி அந்த இரண்டு கல்யாணங்களும் ராஜ வைபவமாக நிறைவேறின.

பின்னர் உத்தியோகஸ்தர்களனைவரும் விடை பெற்றுச் செல்ல, விவாகத்துக்கு வந்திருந்த மற்றை யோரெல்லாம் மாங்குடியிலேயே சில நாள் வரை களிப்புக்கடலில் திளைத்திருந்து பிறகு விடைபெற்றே கினர்.

இதற்கிடையில் ஒரு நாள், ஜெயராமன் மலாய் நாட்டிலிருந்து வந்தது, கோகிலத்தைத் திருச்சிக்குக் கொண்டுபோனது முதலிய விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று எல்லோரும் கேட்டுக்கொண்டனர்.

அவன் சொல்லுகிறான்: "நான் மலாய் நாட்டுக் குப்போய் இரண்டரை ஆண்டுகளாய் விட்டன. இன் னும் சிலமாதங்களில் ஊர் வந்து கோகிலத்தை அடை யலாமென மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந் தேன். இவ்வாறிருக்கையில் ஒரு நாள் "கோகிலத்தை மணம் பேசி நிச்சயதார்த்தம் செய்தாய்விட்டது" என்று அம்மான் அவர்கள் கடிதமெழுதியிருந்தார் கள். அதைக்கண்டதும் என் தலையில் இடிவிழுந்தது போலிருந்தது. அன்று முதல் எனக்கு ஒன்றிலும் ஓடவில்லை. பித்துப் பிடித்தவன்போலிருந்தேன். சில நாட்கள் சென்றதும் கோகிலத்தினிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், நான் வந்து அவளை எப்படி யும் காப்பாற்ற விட்டால், கல்யாணத்தன்று அவள் நிச்சயமாக உயிரை மாய்த்துக்கொள்ளப் போவதாக எழுதியிருந்தாள். அதே கடிதத்தில் ஞானம்பாளைப் பற்றியும் சிறிது விளக்கி அவளுடைய உதவியால் ஒரு நாடகம் நடிக்கலாம் என்றும் எழுதியிருந்தாள்.

அப்பொழுது என் முதலாளி அங்கு இருந்தார். நான் விஷயத்தை ஒரு விதமாக அவரிடம் கூறி ஊருக்கு வரவேண்டு மென்று விடைகேட்டேன். அவரும் எனது நிலைமையைக்கண்டு ஒப்புக்கொண்டு விட்டார். உடனே பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தேன். இந்த நிலைமையில் என்னுடைய நல்ல காலம் எனது சம்பளத்திலிருந்து ஒரு லாட்டரிக்கு ஐந்து வெள்ளி செலுத்தியிருந்தேன். அதிர்ஷ்டவச மாக அதிலே முதல் பிரைஸ் நாற்பது ஆயிரம்வெள்ளி எனக்குக்கிடைத்தது. அதையும் உடனே என்னிடம் சேர்ப்பித்தார்கள்.

"பிறகு, அங்கிருந்து புறப்பட்டு நேரே திருச் சிக்கு வந்தேன். முன்பு இந்த ஊரிலிருந்த வாத்தியா ரம்மாளைத் தற்செயலாகத் திருச்சியிற் கண்டேன். அவர்களிடம் சகல விருத்தாந்தங்களையும் கூறி, அவர் கள் மூலமாகவே இங்கு நடந்த கல்யாண ஏற்பாடு களை யெல்லாம் தெரிந்துகொண்டேன். பிறகு அவர் கள் உதவியாலே கோகிலத்தைக் கொண்டுபோவதற் குத் தகுந்த ஏற்பாடுகள் செய்து, எனது நண்பர்கள் உதவியால் திருச்சியில் அதே இரவு நாங்கள் விவா கத்தை முடித்துங்கொள்வதற்குத் தக்க ஏற்பாடுக ளும் செய்து வைத்திருந்தோம். அன்று இரவு பதி னொரு மணிக்கு மோட்டாரைக் கொண்டு வந்து தெருக்கோடியில் நிறுத்தியிருந்தோம். கோகிலம் தேக உபாதைக்காக வெளியில்வருபவள் போல வந்து காரில் ஏறிக்கொண்டாள். பிறகு ஞானாம்பாள் கோகி லத்தைப் போலவேயிருப்பதால், முன்னேற்பாட்டின்

படி கோகிலமாக நடித்தாள். இரவு நேரமாயிருந் ததபடியால், எங்கள் நாடகம் சுலபமாய் நிறைவே றிற்று. பிறகு நடந்தவைதான் எல்லோருக்கும் தெரி யுமே'' என்று கூறி முடித்தான். எல்லோரும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

9

கல்யாண வைபவமெல்லாம் சம்பிரமமாக முடிந் தன. அவை சம்பந்தமாகப் பணம் கொடுக்கவேண்டி யது வாங்க வேண்டியதெல்லாம் ஜெயராமன் முன் னின்று முடித்து வைத்தான்.

சமய சஞ்சீவியாக இருந்து உதவி செய்த வாத் தியாரம்மாளை அவர்கள் மறக்கவில்லை. தக்க ஸன்மா னம் அளித்து அவரைக் கௌரவப்படுத்தினர். ஊர் முழுவதுமே அந்த அம்மையாரைப் பாராட்டிப் பேசிற்று. லேடீஸ் கிளப் காரியதரிசிப் பெண்மணிக் கும் புகழ் ஓங்கிற்று.

பிறகு சில நாட்களிலெல்லாம் சென்னையில் அழ கப்பனும் ஜெயராமனும் அடுத்தடுத்து இரண்டு பங்க ளாக்கள் வாங்கிக்கொண்டு, தம்பதி சமேதராய் அங்கு எழுந்தருளிவிட்டனர்.

ஜெயராமனின் பெற்றோரைப்பற்றி இது வரை ஒன்றும் கூறவில்லையன்றோ!

ஜெயராமன் தந்தை அவனுடைய சிறுவயதிலேயே மரண மடைந்து விட்டார். அவன் தாய்க்கு

அவன் ஒரே பிள்ளை. இப்பொழுது அவன் தாயாரும் சென்னைக்கே வந்து விட்டார். ஞானத்துக்குத்துணையாக அவனுடைய தாயும் சென்னையிலேயே வந்திருக்கிறார்.

இரண்டு குடும்பங்களும் ஒன்றுக் கொன்று துணையாகப் பெரும் சந்தோஷத்தோடு வாழ்க்கை நடாத்தி வருகின்றன.

கோகிலத்தின் பெற்றோர்கள் அடிக்கடி சென்னைக்கு வந்து தங்கள் குமாரத்தியின் இன்பவாழ்க்கையைக் கண்டு பெருங்களிப்படைந்து செல்கின்றனர்.

ஞானத்தின் நற்குண நற்செயல்களினாலும் அவளுடைய மேம்பாடான மனப் போக்கினாலும் அழகப்பனின் தாய் தந்தையர்கள் அவள் பேரிற் கொண்டிருந்த வெறுப்பையும் கோபத்தையும் மறந்து உண்மையான பட்சங்காட்டி வருகின்றனர். அவர்களும் அடிக்கடி சென்னைக்கு வந்து தங்கள் மகனும் மருமகளும் நடத்துகின்ற ஒற்றுமையான வாழ்க்கையைக்கண்டு சந்தோஷமடைந்து செல்கின்றனர்.

மிஸஸ். ஜெயராமன் (கோகிலம்) இப்பொழுது மனம் போல் மாங்கல்யம், என்ற மகிழ்ச்சியினால் பூரித்துப் புளகாங்கித மடைந்து ஆள் கூட கொஞ்சம் பருத்துவிட்டார்.

அவர் ஆதியில் போட்டிருந்த 'பிளான்' களும் கட்டியிருந்த மனக்கோட்டைகளும் இப்பொழுது படிப்படியாக நிறைவேறிக்கொண்டு வருகின்றன.

10

சில மாதங்கள் கடந்தன. ஒருநாட்காலை ஒன்பது மணியிருக்கலாம். சென்னையில் கோகில விலாசத்தில் (அதுதான் ஜெயராமனுடைய பங்களாவின் விலாஸம். ஞான விலாஸம் என்பது அழகப்பனுடைய பங்களா) ஓர் சமையலறை. அடுப்பிலே சாதம் வெந்துகொண்டிருந்தது. கோகிலம் குழம்புக்குப் புளிக்கரைத்துக்கொண்டு அடிக்கடி ஜெயராமனுக்கு மறுமொழி கொடுத்துக் கொண்டிருந்தாள். கொஞ்ச தூரத்திலே ஜெயராமன் தரையில் உட்கார்ந்து 'மார்க்கெட்'டிலிருந்து வாங்கிவந்த கீரையை ஆய்ந்துகொண்டிருந்தான். அவனுக்கு எதிரில் கறிகள் நறுக்கி வைக்கப்பெற்ற இரண்டு மூன்று சட்டிகளும், வெங்காயம் பச்சை மிளகாய் அரிந்து வைக்கப்பெற்ற ஒரு தட்டும் இருந்தன. அரிவாள்மணை ஒன்று பக்கத்திற் கிடந்தது. சிறிது தூரத்துக்கப்பால் ஜெயராமனுடைய தாயார் நிறையத் திருநீறு பூசி, சம்மணம் கொட்டியுட்கார்ந்து, பாதிக் கண்ணை மூடியும் மூடாமலும் பகவத் தியானத்திலே யீடுபட்டவளாய், ஜெபமாலையை உருட்டிக் கொண்டு இடையிடையே தன் மகனையும் மருமகளையும் நோக்கியவண்ணம் கண்ணையும் கருத்தையும் செவிகளையும் இவர்கள்பாற் செலுத்தியவளாய் நிஷ்டையிலே யிருந்து கொண்டிருந்தாள்.

வெங்காயம் அரிந்ததனால் ஜெயராமனுடைய கண்கள் கலங்கிப் போயிருந்தன. இரண்டொரு சொட்டு நீரும் சிந்திற்று. அதைப் பார்த்ததும் கோகிலம் மனம் பொறாதவளாய் "வெங்காயம் நறுக்க வேண்டாமென்றால், கேட்கின்றீர்களா? பெண் பிள்ளைகள் பார்க்க வேண்டிய வேலைகளில் சமதருமம் பேசிக்கொண்டு நுழைந்து விடுகிறீர்கள்! நீங்கள் அங்கேயிருந்து நறுக்கும்பொழுதே எனக்குக் கூடக் கண்ணில் ஜலம் வந்துவிட்டது. அவ்வளவு எரிச்சல்! இனிமேல் இந்த வெங்காயம் வாங்கக்கூட வேண்டாம்!" என்று அன்பொழுகக் கூறினாள்.

அதைக்கேட்டதும், ஜெயராமன் புன்சிரிப்படைந்து, "அது எரிச்சற்கண்ணீரல்ல, ஆனந்த பாஷ்பம். இதற்காக வெங்காயத்தை நிறுத்தினால், அடுப்பு மூட்டுகிற சிரமத்துக்காகச் சமையற் பண்ணுவதையும் நிறுத்திவிட வேண்டியதுதான்!" என்றான். உடனே கோகிலம் கலகல வென்று நகைத்துக் கொண்டு, "அதுவும் நல்ல யோசனைதான். 'ஹாய்' யாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்கலாம்" என்று கூறினாள்.

அதைக் கேட்டதும் நிஷ்டையிலிருந்த அவளுடைய மாமி "ஆத்தாள், நீங்களிருவரும் சித்தாந்தம் பேசி என் வயிற்றைக் காயப் போட்டு விடாதீர்கள்!" என்றாள்.

உடனே மற்ற இருவரும் 'கொல்'லென நகைத்தனர்.

பிறகு ஜெயராமன் சம்பாஷணையை வேறு வழியில் திருப்பவிரும்பியவனாய், "என்ன ஆச்சரியம்! அழகப்பா எவ்வளவு சீக்கிரம் திருந்தி விட்டார். இப்படி அவர் திருந்தி விடுவார் என்று நான் சிறிது கூட எதிர்பார்க்கவில்லை.!" என்று வியப்போடு கூறினான்.

கோகிலம்:- அதிலென்ன ஆச்சரிய மிருக்கிறது! புஷ்பத்தைக் கட்டியிருக்கிற நாருமல்லவா மணம் பெறுகிறது! ஞானத்தை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்ற பிறகு, எவ்வளவு துஷ்டராயிருந்தால்த் தானென்ன! எத்தகைய மூர்க்கத்தன முடையவராயிருந்தால்த் தானென்ன! ஒரு பெரிய பஞ்சுப் பொதிக்கு ஓர் சிறிய நெருப்புப் பொறி போதாதா! ஞானத்தின் பரிசுத்தத் தன்மை எத்தகைய மாசையும் கழுவி விடாதா !

ஜெயராமன்:- இருந்தாலும் இது ஒரு பெரிய ஆச்சரியந்தான். எவ்வளவு துஷ்ட சகவாஸம்! எவ்வளவு துர் நடத்தை! எத்தகைய முரட்டுச் சுபாவம்! அவ்வளவிலும் பெரிய மாற்றம் ஏற்படுவதாயிருந்தால் இது ரொம்பவும் ஆச்சரியமானதே.

கோகிலம்:- எல்லாம் சகவாஸ சதோஷம் தான்! ஞானத்தின் போதனையும் உங்களுடைய சகவாஸமும் ஏற்பட்ட பிறகு கேட்பானேன் !

ஜெயராமனின் தாய், (ஜெபமாலை உருட்டுவதை நிறுத்தி), "தம்பீ! உலகத்திலே கெட்டவர்கள் நல்லவர்களாவதும் நல்லவர்கள் கெட்டவர்களாவதும் இல்லாத விஷயமில்லையே! எல்லாம் சேர்க்கையைப் பொறுத்தது தானே! மகா மேதாவிகளாயும் சன்மார்க்க சீலர்களாயும் இருப்பவர்கள் துஷ்டர்களின் சேர்க்கையாற் சிலநாட்களில் மிகவும் கெட்டுப்போய் விடுகிறார்கள். துஷ்ட சகவாஸத்தினாலே கெட்டுப் போனவர்கள் நல்லவர்களுடைய கூட்டுறவை அடையும்பொழுது நல்ல வழியில் திருந்தி விடுகிறார்கள். அந்த இனத்தைச்சேர்ந்தவன் அழகப்பன். பிறவியிலேயே அவன் துஷ்டனில்லை. ஏதோ சில காலம் சில கொடியவர்களின் கூட்டுறவாற் கெட்டலைந்து திரிந்தான். இப்பொழுது நல்ல சகவாஸம் ஏற்படவே வெகு சீக்கிரம் திருந்தி விட்டான்.

கோகிலம்-"ஆம். இதனால்த்தான் நல்லவர்களுடைய சேர்க்கையே வேண்டுமென்றார்கள் பெரியோர்கள். கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடி பெறும், என்று ஔவையார் கூடச் சொல்லியிருக்கிறார்; இல்லையா?"

என்று ஜெயராமனை நோக்கி இனிமையாகப் புன்னகை செய்தாள். அவனும் அதை மகிழ்ச்சியோடு வற்றுக்கொண்டு தாயை நோக்கி "ஆத்தாள்! விதவா விவாகம் வந்தால் சமூகமே முழுகிப் போய்விடும் என்று சொன்னார்களே! ஞானம்பாளின் விவாகத்துக்குப் பின்னர் எது முழுகிப் போய்விட்டது? இப்பொழுது அவர்

கள் எவ்வளவு சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறார்கள்?'' என்று சொன்னான்.

இவ்வாறு இவர்கள் வார்த்தையாடிக்கொண்டிருக்கும் பொழுது ஞானம் ஒரு கைக்குழந்தையுடன் உள்ளே வந்தாள்.

எல்லோரும் சந்தோஷமாக வரவேற்றனர். ஜெயராமனின் தாய் தனது நிஷ்டையைக் கலைத்து, அக்குழந்தையைக் கையில் வாங்கிக்கொண்டாள்.

அது ஞானத்தின் குழந்தை. பெண் மகவு. பிறந்து இப்பொழுது இரண்டுமாதங்கள் ஆகின்றன. நல்ல சிவப்பாயும் புஷ்டியாயும் மிக்க அழகாயும் அக்குழந்தை இருந்தது.

'கோகு' என்று கொஞ்சிக்கொண்டே ஜெயராமனின் தாய் அக்குழந்தையைக் கையிலேந்தினாள். ''சீக்கிரம் பேரன் பிறந்து அதையும் இப்படிக்கொஞ்ச வேண்டும்'' என்று வாழ்த்திக் கொண்டே ஞானம் குழந்தையைக் கொடுத்தாள்.

கோகிலத்தின் பெயரே அக்குழந்தைக்குச் சூட்டப்பட்டிருந்தது.

'' என்ன, அண்ணா! அடுப்பங்கரை உத்தியோகம் பலமாயிருக்குப் போலிருக்கே! '' என்று ஜெயராமனை நோக்கி ஞானம் கேலியாகக்கூறினாள்.

"துணைவியாருக்கு உதவி" என்றான் ஜெயராமன் சிரித்துக்கொண்டே.

உடனே கோகிலம் "ஆமாம்! உனக்கென்ன! குழந்தைபேரில் சாக்கைப்போட்டு வேலைகளை மழுப்பி விடுகிறாய். உன் தாய் ஒருத்தி வந்து மாட்டிக்கொண்டாளல்லவா!, எல்லாவேலைகளையும் தான் சுமக்க" என்றாள். குறும்புச் சிரிப்பு அவள் உதடுகளினூடே மறைந்து கொண்டிருந்தது.

ஞானம் "ஆமமாம்! நீங்கள் வாங்கள் மிஸஸ். உங்கள் வள்ளலையும், இன்னும் கொஞ்ச நாளில், பார்க்கத்தானே போகிறோம்!" என்று நகைத்துக் கொண்டே கூறினாள். (கோகிலத்துக்கு இப்பொழுது ஆறு மாசம்.)

அதைக்கேட்டு எல்லோரும் சந்தோஷம் எய்தினர்.

* * *

அந்த இரண்டு பங்களாக்களுக்கும் உள்ள பின்புறத்தோட்டங்களை ஒரே தோட்டமாக்கி, அதை ஒரு அழகிய பூங்கா வனமாகச் செய்து அதில் ஒரு டென்னிஸ் கோர்ட்டும் ஏற்படுத்தியிருந்தனர்.

மாலை நேரங்களில் டென்னிஸ் ஆடுவதும், கடற்கரைக்குப் போவதும், சினிமாவுக்குச் செல்வதும், கோயிலுக்குப் போவதும், கூட்டங்களுக்குச் செல்வ

தும், பிரசங்கங்கள் புரிவதுமாக ஜெயராம-கோகிலமும் ஞானம்பாள்—அழகப்பாவும் தங்கள் வாழ்க்கையை இனிமை பெறச்செய்து கொண்டு விட்டனர்.

அவர்களுக்குக் கூட்டாகச் சென்னையிற் பிரபலமான ஓர் சுதேசி எம்போரியமும் நடந்து வருகிறது.

நாளுக்கு நாள் அவர்களுடைய உத்சாகமும் மகிழ்ச்சியும் களிப்பும் சந்தோஷமும் பெருக்கெடுத்தோட, இந்த உலக வாழ்வு அவர்களுக்குத் தெவிட்டாத இன்ப வாழ்வாகத் தோன்றிப், பேரானந்தப் பெருங் கடலில் திளைத்துக் கொண்டிருக்கின்றனர்.

* * *

இன்று மாதர் சங்கத்தில் மிஸ்டர் ஜெயராமன் அவர்கள் தலைமையில் 'நவயுகப் பெண்கள்' என்பது பற்றி மிஸஸ். ஜெயராமன் அவர்கள் பேசப் போகின்றார்களாம்.

நேயர்கள் எல்லோரும் அக் கூட்டத்திற்கு விஜயம் செய்வார்களென நம்புகின்றேன்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்,
அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்;
பூணும் நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்;
நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்;

ஞானம், நல்லறம், வீர சுதந்திரம்
பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம்,
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டீரோ!

(பாரதியார்)

சுபம்



திங்கள் மலர்.

அய்மென்
ஷண்முகானந்த சங்கத்தின்
நூறுவது மாத விழாவை
முன்னிட்டுத் தயாராகின்றது.

அழகிய படங்கள்!

அருமையான கட்டுரைகள்!

உயர்ந்த கவிதைகள்!

சிறந்த கதைகள்!!

நெஞ்சை அள்ளும் முறையில்
விரைவில் வெளிவரும்.

விளம்பரக்காரர்களுக்கு
ஒரு அரிய சந்தர்ப்பம்!

—0—

Printed At
The Chettiars' Press,
68, Mogul Street, Rangoon.